நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

# செந்தமிழ்

பகுதி: 8

தொகுதி: 112

திருவள்ளுவர் ஆண்டு 2049

திங்கள் இதழ்

விலை: ரூ.20

ஆகஸ்ட் - 2018




நான்காம் தமிழ்ச் சங்கம்-மதுரை 14.09.1901 THE FOURTH TAMIL SANGAM, MADURAI

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி** | தலைவர் |
| மருத்துவர் **ந.சேதுராமன்** | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | செயலாளர் |
| திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | உறுப்பினர் |
| முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** | உறுப்பினர் |
| பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்** | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | உறுப்பினர் |
| திரு. **துரை கருணாநிதி** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி
## கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | தலைவர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | செயலாளர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்ப முரளி** | உறுப்பினர் |
| பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம் I.R.S.,** (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **து.மாயராசன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **சு.சிவசாமி** | உறுப்பினர் |
| பொறியாளர் **லெ.சிவக்குமார்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி** | உறுப்பினர் |
| திரு. **ஜெ.பாலதண்டாயுதம்** | உறுப்பினர் |
| முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்

1. இதழ் மணம் 4

2. மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் - சில நினைவுகள் 6
- முனைவர் ம.திருமலை
சென்ற இதழின் தொடர்ச்சி

3. சிலப்பதிகாரப் புதையல்கள் - கவுந்தியடிகள் 13
- முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

4. குயில் பாட்டில் மெய்ப்பாடு 19
- பேராசிரியர் செ.வை.சண்முகம்
சென்ற இதழின் தொடர்ச்சி

5. இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை 25
- பேராசிரியர் இரா.கோதண்டராமன்
சென்ற இதழின் தொடர்ச்சி

6. தொல்காப்பியம் கூறும் கவிதை மொழி 30
- பேராசிரியர் ப.மருதநாயகம்
சென்ற இதழின் தொடர்ச்சி

7. சங்கச் செய்திகள் 38

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 3,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 20 | |

# இதழ் மணம்

இந்தியத் திருநாட்டில் பொது ஒழுக்கம் மிகவும் தரம் தாழ்ந்து குன்றிப் போனது சமுதாயத்தில் பெரும் அச்சத்தையும் தீங்கையும் ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்க செய்தியாகும். அரசியல், சமயம், கல்வி ஆகிய துறைகளில் இன்று ஏற்பட்டுள்ள இழிநிலை சமுதாயச் சீரழிவிற்கு மிக முக்கியமான காரணமாகும்.

பொது நிறுவனங்களுக்குத் தலைமை ஏற்கின்றவர்களுடைய தகுதியை முறைப்படுத்துகின்ற நடைமுறை ஒழுங்கு இந்நாட்டில் கடைநிலைக்குப் போய்விட்டது. ஒழுக்கம், மனத்தூய்மை, கல்வி, நிர்வாக ஆளுமை ஆகிய பண்புடைமை பள்ளிப் பருவத்திலிருந்து மேலைநாடுகளில் பயிற்றுவிக்கப்படுகிறது. கல்விநிறுவனங்களிலும் பணி இடங்களிலும் இத்தகைய ஆளுமை உடையவர்கள் மிக உயர்ந்த பணிகளுக்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள். அதனால் வளர்ந்த நாடுகளில் செயல் திறமை பாதுகாக்கப்படுகிறது. இந்திய நாட்டில் பணம், விளம்பரம், அடியாட்கள் நிறைய உடையவர்கள் மேலோராகப் பெரும் பதவிக்காரர்களாக அமர முடிகிறது. இளைஞர்கள் தக்க கட்டமைப்புடைய பணி மையங்கள், வாய்ப்புக்கள் உருவாக்கப்படாமையால் வேலை வாய்ப்பின்றி அல்லலுறுகின்றார்கள்.

தெ.பொ.மீ, மு.வ., வ.சுப.மா போன்ற அறிஞர்கள் அரிதின் மலரும் குறிஞ்சி மலராகக் காட்சியளிக்கின்றார்கள். அத்தகைய பெருமக்களுடன் தன் பயணத்தைத் தொடங்கிய நினைவு அலைகளைப் பேராசிரியர் ம.திருமலை அவர்கள் மாணவர் ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்வது போற்றுதற்குரியதாகும். எதிர்காலத்தை உருவாக்க இத்தகைய சிந்தனை நலம் வாய்ந்த அறிஞர்கள் வாழ்க்கையை படம்பிடித்து ஆசிரியர் காட்டுவது சமுதாயத்தின் சிந்தனைப்போக்கை மாற்றம் அடையச் செய்வதற்கு இன்றி அமையாததாகும்.

அறிஞர் இரா.இளங்குமரனார் சிலப்பதிகாரப்புதையல் என்னும் தலைப்பில் கவுந்தியடிகள் குறித்த திறனாய்வைப் படைத்துள்ளார்.

“கால உணர்ச்சி இன்மை அறிக” என்று உரை ஆசிரியர் அடியார்க்கு நல்லார் எடுத்துரைக்கின்றார். “கால உணர்ச்சி” குறித்து விளக்கம் தேவைப்படுகிறது. ஒரு பொழுது இடைக்குல மடந்தை

இல்லத்தில் தங்குவதற்கு பற்பல ஓம்படை கூறுவதாக உரை ஆசிரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவதும் இவர்க்குக் "கால உணர்ச்சி இன்மை அறிக" என வலியுறுத்துவதும் உரை ஆசிரியரையும் நூலாசிரியரையும் சிந்திக்க வைக்கிறது. "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" எனக்குறிப்பிடும் ஆசிரியர் கூற்றோடு கால உணர்ச்சி என்னும் உரை ஆசிரியர் கூற்றுக் குறித்த விளக்கம் தேவைப்படுகிறது.

பேராசிரியர் ப.மருதநாயகம்

பேராசிரியர் செ.வை.சண்முகம்

பேராசிரியர் இரா.கோதண்டராமன்

ஆகிய மூவர் கட்டுரைகளும் சென்ற இதழின் தொடர்ச்சி ஆகையால் அதற்குரிய செய்தி இதழ்மணத்தில் ஏற்கனவே வெளிவந்துள்ளது.

## மதுரை காண்டமும் மன்னவன் சிறப்பும்

*"வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொ றூழிதொ றுலகங் காக்க
அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி!
முடிவளை யுடைத்தோன்முதல்வன் சென்னியென்று
இடியுடைப் பெருமழை எய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்
தீதுதீர் சிறப்பின் தென்னனை வாழ்த்தி
மாமுது மறையோன் வந்திருந் தோனை"*

# மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் - சில நினைவுகள்

- முனைவர் **ம.திருமலை**
முன்னைத் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
கைபேசி: 9442158802.

## சென்ற இதழின் தொடர்ச்சி

### மெய்வருத்தம் பாரார்

ஐந்தமிழ் விழாவின் அறக்கட்டளைப் பொழிவுகள் நடைபெற்ற போது துணைவேந்தர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் ஒவ்வொரு பணியையும் தானே நேரில் கவனித்து மேற்பார்வை செய்தார்கள். இதுவும் எனக்கு ஒரு நல்ல வழிகாட்டுதலாக இருந்தது. அழைப்பிதழைத் தயார் செய்த போது ஒவ்வொரு அறக்கட்டளைக்கும் ஒரு தாள் (இரண்டு பக்கம்) என்று ஒதுக்கி அதில் அறக்கட்டளையின் பெயர், நிறுவியோர், அறக்கட்டளையின் முதன்மை நோக்கம், சொற்பொழிவின் பொருள், பொழிஞரின் பெயர், நாள், நேரம், இடம் முதலிய விவரங்கள் ஒரு பக்கத்தில் இருக்குமாறு மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் அவர்கள் அமைத்தார்கள். இதனால் ஒவ்வொரு அழைப்பிதழும் அந்தந்த அறக்கட்டளைகள் குறித்த ஆவணமாகத் திகழ்ந்தது. ஒவ்வோர் ஆண்டும் தயார் செய்யப்பட்ட அழைப்பிதழ்கள் ஒரு சிறிய புத்தகம் போல அமைந்திருக்கும்.

நான் பின்னாட்களில் 2012 முதல் 2015 வரை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகக் கடமையாற்றிய போது, ஒவ்வொரு துறையின் பணிகளை விவரிக்கும் ஆண்டுப் பணித்திட்டம் என்ற தகவல் குறிப்பேட்டினை வெளியிட்டேன். அதற்கு உந்துதல் இந்த அழைப்பிதழ்கள் தாம்!

### *கருமம் சிதையாமல் கண்ணோட வல்லவர்*

சிறந்த மனிதநேயச் செம்மலாக முனைவர் வ.சுப.மாணிக்கனார் திகழ்ந்தார். ஒருமுறை விடுதியில் தங்கியிருந்த முதுகலை மாணவர் ஒருவர் ஒருவகைத் தனிமையுணர்வு, மனப்பிறழ்வு காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார். அன்றைய நாள் முழுவதும் மூதறிஞர் அவர்கள் விடுதியிலேயே இருந்து மாணவனின் உடலைப் பல்கலைக்கழக வாகனத்தின் மூலம் அவரது சொந்த ஊருக்குப் பெற்றோருடன் அனுப்பி வைப்பதில் முனைந்து இருந்தார். பொதுவாக மூதறிஞர் அவர்களைக் குறித்து மிகவும் கடினமானவர், இறுக்கமானவர்,

சமரசம் செய்து கொள்ளாதவர் என்று கருத்துகள் கூறப்படுவதுண்டு. இக்கருத்துகள் எந்த அளவிற்கு உண்மையோ அந்த அளவிற்குத் தவறானவையும் ஆகும்! அவர் எந்த அளவிற்குக் கட்டுப்பாடுகள் மிகுந்தவரோ அதற்கு இணையாக இளகிய மனமும் உடையவர்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிற்காகப் பல்கலைக்கழகத்தின் விடுதி அறைகள் காலி செய்யப்பட்டு அவற்றில் மாநாட்டுக் கருத்தரங்கப் பேராளர்கள் தங்க வைக்கப்பட்டனர்; மாணவர்கள் அவரவர் வீடுகளுக்குச் சென்றனர். சிலர் அருகில் உள்ள இடையன்தர்மம் கிராமத்தில் தங்கினர். மாநாடு முடிந்தவுடன் துணைவேந்தர் அவர்கள் பல்கலைக்கழக அதிகாரிகளை அழைத்து "சீக்கிரம் விடுதிகளைத் திறங்க மாணவர்கள் எத்தனை நாட்களுக்கு 'கிளப்' கடையில சாப்பிடுவாங்க...?" என்று கூறினார். அவர் இவ்வாறு கூறியபோது ஏதோ பணியின் நிமித்தம் துணைவேந்தர் அறைக்குச் சென்றிருந்த பேராசிரியர் தமிழண்ணல் அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். துணைவேந்தர் மாணவர்களின் நலன் கருதிக் கூறிய கருத்துக்களை நானே நேரில் இருந்து கேட்டேன்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் பேராளர்கள் விடுதியில் தங்கிய போது, அவர்களுக்கான அறையில் பொருத்தப்பட்ட மின் விசிறிகளைக் கழற்றி ஏலம் விட்டு விடலாம்; வரக்கூடிய நிதியைப் பல்கலைக்கழகத்தின் கணக்கில் சேர்த்து விடலாம் என்று பல்கலைக்கழக அதிகாரிகள் கருத்துத் தெரிவித்த போது துணைவேந்தர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் அதனை மறுத்து, அவை உள்ளவாறே இருக்கட்டும் என்றும் மாணவர்களுக்கு வெயில் காலத்தில் அது பேருதவி என்றும் கூறினார். அவரது மனித நேயத்திற்கு இது தக்க சான்றாகும்.

***"கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை***
***உண்மையான் உண்டிவ் வுலகு"***

- கண்ணோட்டம், 571

என்ற குறட்பாவிற்கு வ.சுப.மா.அவர்கள் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

**வினைத்திட்பமும் மனத்திட்பமும்**

தாம் எடுத்த முடிவில் உறுதியாக நிற்பவர் என்றும் எதற்கும் வளைந்து கொடுக்காதவர் என்றும் பெயர் பெற்றவர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள்! பொதுவாகச் சமூகத்தில் சலுகைகள், பரிந்துரைகள் மூலம் காரியம் சாதிக்கப் பலரும் முயற்சி செய்வர். மதிப்பெண் குறைவாகப் பெற்ற மாணவர்களைப் பல்கலைக்கழகத் துறைகளில் முதுகலை வகுப்பில் சேர்த்துக் கொள்ளுமாறு பிரமுகர்கள்

பரிந்துரை செய்வதுண்டு. துணைவேந்தர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் அப்பரிந்துரைகளை எவ்விதத் தயக்கமும் இன்றி ஒதுக்கி விடுவார்கள். "பல்கலைக்கழகத்தில் அட்மிசன் எல்லாம் முடிஞ்சி போச்சுங்கிற தாக்கலை (தகவலை) நீங்க தெரிஞ்சிக்கணும்" என்பதுதான் பரிந்துரை செய்தவர்களுக்கு வ.சுப.மாணிக்கனார் அளித்த பதில். இவ்வாறு அவர் பதில் கூறியதை நான் நேரில் கேட்டதுண்டு.

**"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற் கியல்பு"**

- *இறைமாட்சி*, 382

என்ற குறட்பாவுக்குச் செயல் வடிவம் தந்தவர் வ.சுப.மாணிக்கனார்.

**நன்றின்பால் உய்க்கும் அறிவுடைமையாளர்**

பல்கலைக்கழக நிருவாகத்தில் கோப்புகளைப் பார்வையிட்டு ஆணைகள் வழங்குவதில் அவரது கூர்த்த மதியும் துணிவுடைமையும் நன்கு புலப்படும். கோப்புகளில் பல்கலைக்கழக நிதி அலுவலர் (Finance Officer) தமது கருத்துக்களை எழுதிய பின் பதிவாளர் வழியாகத் துணைவேந்தரின் ஆணையை எதிர்நோக்கிக் கோப்புகள் வருவதுண்டு. பொதுவாக நிதி அலுவலர் எழுதிய கருத்துக்களுக்கு மாறாக எந்தத் துணைவேந்தரும் ஆணை பிறப்பிப்பதில்லை. ஏனென்றால் அக்கோப்புகள் பின்னர் தணிக்கைக்கு உட்படும். ஏதேனும் தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டு விடும் என்பதால் துணைவேந்தர் கோப்பை மீண்டும் அனுப்புமாறு கூறித் திருப்பி அனுப்பி விடுவார். ஒரு சிலரே கோப்பின் அவசரம், அவசியம் கருதித் தங்கள் எண்ணத்தைப் பதிவு செய்து ஆணைகள் பிறப்பிப்பார்கள். தமிழறிஞர்கள் பலர் துணைவேந்தர்களாகத் திகழ்ந்தபோது பெரிதான அச்ச உணர்வுகளின்றி ஆணைகள் பிறப்பித்து விடுவர்; துணைவேந்தர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் எவ்விதத் தயக்கமும் இன்றித் தடைகளைக் கடந்து ஆணைகள் பிறப்பித்து விடுவார். இதனைப் பல்கலைக்கழக அதிகாரிகள் சிலாகித்துப் பேசுவதுண்டு.

தமிழறிஞர்கள் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட போதெல்லாம் பல்கலைக்கழகங்கள் செழித்து வளர்ந்தன என்பது கண்கூடாகத் தெரியும் உண்மை. மேற்போக்கான உரையாடல்களில் "தமிழ் வாத்தியார்தானே" என்று எளிதாகக் கூறுவார்கள் உண்மை அறிவில்லாதவர்கள்! ஆனால் தெ.பொ.மீ, மு.வரதராசனார், வ.சுப.மாணிக்கனார் போன்றவர்கள் துணைவேந்தர்களாக இருந்த போதுதான் மதுரை காமராசர்

பல்கலைக்கழகம் மிகுதியான வளர்ச்சிகளைக் கண்டது. காலச் சூழல்களுக்கு ஏற்றவாறு மேலாண்மைத் துறை (Management Dept) எரியந்துறை (Energy Dept) போன்ற துறைகளை வ.சுப.மாணிக்கனார் தோற்றுவித்தார். இத்துறைகள் உலகத்தவர், கல்வியாளர்களின் கவனத்தை ஈர்த்த துறைகளாகத் திகழ்ந்தன. நடுவண் அரசின் பாதுகாப்புத் துறை (Defense Ministry) அதிகாரிகள் பயிற்சி பெறும் துறையாக ஆள்வினைத் துறை ஒரு காலத்தில் திகழ்ந்தது.

**நயனுடையார்**

துணைவேந்தராக இருந்த போதிலும் எளிமைப் பண்புடையவராகக் கூடுதல் வசதிகளை அனுபவிக்காதவராக வ.சுப.மாணிக்கனார் இருந்தார். இற்றை நாட்களில் துணைவேந்தர் இல்லங்கள் அதிகப் பொருட் செலவில் புதுப்பிக்கப்படுதல் கண்கூடு. விலையுயர்ந்த வாகனங்கள், குளிர்சாதன வசதிகள் என்று பட்டியல் நீளமாகப் போகும். உரிய தேவைகளைக்கூட மிகவும் குறைத்துக் கொண்டவர். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடந்த போது துணைவேந்தரின் அறைக்கும் படிகளில் ஏறிச்செல்ல அவரது உடல்நிலை ஏற்புடையதாக இல்லாத நிலையில், முதன்மை நிருவாகக் கட்டடத்தின் கீழ்த் தளத்தில் ஒரு சாதாரண அறையில் அமர்ந்து வ.சுப.மா. பணிகளைச் செய்தார்.

***"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை***
***யாண்டும் அஃதொப்ப தில்"***

- அவா அறுத்தல், 363

என்ற குறட்பாவிற்கும்

***"............ வாழ்தல்***
***இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்***
***இன்னா தென்றலும் இலமே"***

- புறநானூறு, 192

என்ற சங்கப் பாடலுக்கும் சான்றாகத் திகழ்ந்தவர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள். "ஸ்திரப் பிரக்ஞன்" என்று தலைமைப் பண்புடையவர்களுக்குக் கூறப்படும் இலக்கணம் வ.சுப.மாணிக்கனாரிடமும் இருந்ததை எவரும் அறிவார்! எத்தகைய சூழ்நிலைகளாலும் வசதி வாய்ப்புகளாலும் ஈர்க்கப்படாதவர் அவர் என்பது மிகையான கூற்றல்ல.

**ஒல்லும் வாயெல்லாம் வினை நன்றே!**

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மதுரையில் மிகச் சிறப்பாக

நடந்தேறியதில் வ.சுப.மாணிக்கனாருக்குப் பெரும் பங்கு உண்டு. மாநாட்டுப் பணிகள் பலவற்றையும் அவர் முன்னின்று நேரில் கவனித்துச் செய்தார். நகரில் நடந்த கண்காட்சியில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சார்பில் ஓர் காட்சியரங்கு நிறுவப்பட்டது. தமிழக வரலாறு, பண்பாடு குறித்த பல செய்திகளை எடுத்துக்காட்டும் முறையில் காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவை ஒவ்வொன்றையும் துணைவேந்தர் என்ற நிலையில் மட்டுமல்லாமல் தமிழறிஞர் என்ற நிலையிலும் நின்று கவனத்துடன் செய்தவர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள்.

உலகத்தமிழ் மாநாட்டினை ஒட்டி "உலகத்தமிழ்" என்ற நூலினைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் வெளியிட ஆவன செய்தவர் துணைவேந்தர் வ.சுப.மாணிக்கனார். நான் அப்போது ஆய்வேட்டினைச் சமர்ப்பித்து விட்டு, முடிவுக்காகக் காத்திருந்த சமயம்! மாநாடு தொடங்குவதற்குச் சில நாள்கள் முன்னதாகத்தான் நூலின் கையெழுத்துப்படி எங்கள் கைக்கு வந்தது.... நானும் முனைவர் மு.மணிவேல் அவர்களும் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டோம். துணைவேந்தர் வ.சுப.மாணிக்கனார் அவர்களின் அறையில் நடைபெற்ற கூட்டத்தில் "உலகத்தமிழ்" நூலின் கையெழுத்துப் படிகளை, கட்டுரைகளைச் சுருக்கினால் ஒழிய குறித்த காலத்தில் நூலினை வெளிக்கொணர இயலாது என்பதைத் தயக்கத்துடன் கூறினேன். தேவையான அளவு கட்டுரைச் செய்திகளை வைத்துக்கொண்டு மற்றைய பகுதிகளை நீக்கி விடத் துணைவேந்தர் அவர்கள் அனுமதியளித்தார். மூன்றே நாட்களில் சுமார் முந்நூற்றைம்பது பக்க அளவிலான நூல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. இதற்காக நானும் நண்பர் முனைவர் மு.மணிவேல் அவர்களும் அச்சகத்திலேயே தங்கியிருந்து பணிகளை முடித்தது தனிக்கதை! ஒரு பெரிய நிகழ்ச்சி ஏற்பாடுகளின் போது மிகச்சிறிய கருத்தினையும் நேரில் பார்த்து முடிவுகள் மேற்கொள்ளும் பண்புடையவர் வ.சுப.மாணிக்கனார் என்பதற்காகவே இந்நிகழ்ச்சி விரித்துக் கூறப்பட்டது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பதிப்புத்துறை வெளியீடுகளில் மிக அதிகமாக விற்பனையானது "உலகத்தமிழ்" என்ற நூல்தான். இந்நூல் தமிழ் இலக்கண இலக்கியங்கள், உரைகள், இந்தியாவில் பிற மாநிலங்களில் தமிழ் வளர்ச்சி, உலக நாடுகளில் தமிழ் வளர்ச்சி என்றவாறு அமைந்திருந்தது.

**கற்பித்தலில் ஆர்வம்**

துணைவேந்தர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் முதுகலை

இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கு வாரத்தில் இரண்டு மணிநேரம் பாடங்களைக் கற்பித்தார். கற்பித்தல் பணியை ஒரு போதும் அவர் கைவிட்டு விடவில்லை என்பதற்கு இஃது ஓர் சான்று. ஒரு நல்ல ஆசிரியரே சிறந்த கல்வியாளராக இருக்க முடியும். சிறந்த கல்வியாளர்தான் துணைவேந்தராகவும் இருக்க முடியும். பொதுவாக வயதாலும் அனுபவத்தாலும் மூத்தவர்களே துணைவேந்தர்களாக வருதல் உண்டு. அதனால் மாணவர்களுடனான தொடர்பு காலப்போக்கில் அவர்களுக்குக் குறைந்துவிடும். ஆனால் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் தாம் துணைவேந்தராக ஆன பின்னரும் மாணவர்களுடன் கொண்டிருந்த தொடர்பினைத் தக்க வைத்துக் கொண்டிருந்தவர். இஃது ஓர் அரிய பண்பு ஆகும்.

**பெரும்பொருளால் பெட்டக்க தாக்கியமை**

பல்கலைக்கழகத்தின் நிதிநிலைமையை மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் நேர் செய்தவர். செலவினங்களைக் கட்டுக்குள் கொண்டு வந்தார். அதனால் வருவாய் பெருகி வங்கிகளில் பல்கலைக்கழகத்தின் பெயரில் வைப்புக் கணக்குகள் தொடங்கப்பட்டு, நிதி இருப்பு வைக்கப்பட்டது. 'வ.சுப.மாணிக்கனார் காலத்தில்தான் பல்கலைக்கழகத்தில் நிதி இருப்பு வைக்கப்பட்டது' என்று பின்னாட்களில் அதிகாரிகள், அலுவலர்கள் பேசிக் கொள்வதை நான் கேட்டிருக்கிறேன். இன்றைய பல்கலைக்கழகங்களின் நிதி நிலைமைகளையும் இங்கு ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது. பல்கலைக்கழகத்தின் நிதி இருப்புக்கு ஒரு காப்பாளராக (Care taker) அவர் திகழ்ந்தார்.

**ஆசிரியரின் நற்பெயரைப் போற்றுதல்**

முனைவர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் தம் ஆசிரியரான பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் மீது பெரும் மதிப்புக் கொண்டிருந்தார். பண்டிதமணி அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தம் குடும்ப விழாவைப் போன்று திட்டமிட்டு மிக விரிவாக நடத்தினார். பண்டிதமணியின் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் முதலியவற்றை மறுபதிப்பாகக் கொணர்ந்தார். பண்டிதமணி குறித்து "ஊன்றுகோல்" என்ற காவியத்தையும் கவிஞர் முடியரசனார் அவர்களைக் கொண்டு எழுதச் செய்தார். பண்டிதமணி குறித்துச் சில ஆய்வு நூல்களையும் சில *பேராசிரியர்களைக் கொண்டு எழுதச் செய்தார்.* மதுரை நகரில் தமிழ் இசைச் சங்க அரங்கில் செட்டிநாட்டரசர் தலைமையில் நூல்கள் வெளியிடப்பட்டன. மாபெரும் விழா நடைபெற்றது. இதற்கெல்லாம்

பின்னணியில் கருவியாக இருந்தவர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள்தாம். இளம் வயதில் தனக்குக் கல்வி கற்பித்து உருவாக்கிய ஆசிரியர் பண்டிதமணி அவர்களை மூதறிஞர் தம் வாணாள் முழுவதும் மனத்தில் நிறுத்தி வைத்திருந்தார். தம் ஆசிரியர் பெயரில் பல்கலைக்கழகத்தில் 'பண்டிதமணி அரங்கு' ஒன்றையும் உருவாக்கிச் சிறப்பித்தார். தக்க சமயத்தில் அவரை உலகிற்கும் காட்டினார். நன்றியறிதலில் சிறந்தவர் வ.சுப.மாணிக்கனார்.

*"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன்தெரி வார்"*

- செய்நன்றியறிதல், 104

என்ற குறட்பாவிற்குத் தக்க சான்றாகவும் திகழ்ந்தார்.

மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் தாம் ஏற்றுக்கொண்ட பணியைச் செம்மையாகச் செய்தவர். தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாதவர்; எளிமைப் பண்பாளர்! கொள்கைக் குன்று; துணைவேந்தர் பதவியினின்று ஓய்வு பெற்ற பின்னரும் கூடப் பேருந்திலேயே பயணம் செய்தவர். அதனால் வந்த இடையூறுகளையும் தாங்கிக் கொண்டவர். அவருடைய 'தற்சிந்தனைகள்' நூலில் இது குறித்து அவர் எழுதியுள்ளார். அப்பகுதி நம் கண்களைக் கசியச் செய்யும் திறனுடையது. இத்தகைய உத்தமர்களைக் காண்பதும் அரிது இந்நாளில்.

*"உண்டா லம்ம விவ்வுலக மிந்திரர்*
*அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்*
*தமிய ருண்டலு மிலரே முனிவிலர்*
*துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்*
*புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்*
*உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்*
*அன்ன மாட்சி யனைய ராகித்*
*தமக்கென முயலா நோன்றாட்*
*பிறர்க்கென முயலுந ருண்மை யானே"*

- புறநானூறு. 182

என்ற கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் பாட்டு மூதறிஞர் வ.சுப.மாணிக்கனாருக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

# சிலப்பதிகாரப் புதையல்கள்

## 14 கவுந்தியடிகள்

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

இளங்கோவடிகளின் தேர்ந்து தெளிந்த சால்பு உள்ளத்தின் வெளிப்பாடு ஒன்றைக் கூறுக என்றால் முந்து நிற்க வல்லது கவுந்தியடிகள் என்னும் படைப்பே.

சமண சமயப் பற்றுமையின் விளக்கமே கவுந்தியடிகள் படைப்பு என்றும், இணைத்துக் கொள்ளப்பட்ட புனைவுப் படைப்பு என்றும் எது கூறினும் அவற்றையெல்லாம் கடந்த ஆன்ம நேயமே உயிராகக் கொண்ட, அருமைப் படைப்பு கவுந்தியடிகளாம்.

கவுந்தி, காவுந்தி, ஐயை, காவுந்தியடிகள், மாதவத்தாட்டி என்பவையெல்லாம் தமக்குரியனவாய்த் தாங்கிய அருளம்மை அவர்! பிறிதின் நோய் தம் நோயே எனக் கொண்டு, தாம் கொண்டதனை மெய்ப்பித்துக் காட்டிய மேன்மையர்.

சமயக்கட்டு சமயச்சடங்கு துறவு நிலை என்பவற்றை எல்லாம் தாண்டி நிற்க வேண்டியது - **ஆன்மநேயம்** என்னும் ஒன்றுமட்டுமே என்பதை இளங்கோவடிகளார் எண்ணி எண்ணிப் படைத்த படைப்பு கவுந்தியடிகள்.

ஐ என்பது தாய்: ஐ ஐ என்பது தாயின் தாயாம் பாட்டி. ஔவை என்பதன் பொருளும் அது.

கண்ணகியார்க்கு 'நாத்துணை' யார்? தோழி யார்? தாய் யார்? பாட்டி யார்? செவிலி யார்? அறவர் யார்? அறிவர் யார்? அருளர் யார்? ஆருயிர் என நிலைநாட்டினார் யார்?

**கரும்பாறைக்குள் கரும்பு ஆறும் தோன்றும்** என்பதைக் காட்சி தொட்டுக் கடைநாள் வரை ஆன்மநேய வளர்முறையால் நிலைநாட்டிய அவர், **இளங்கோவடிகளார் உள்ளத் திறவுகோல் அன்னவராம்**!

பத்தாம் காதை தொடங்கிப் பதினைந்தாம் காதையொடு - நாடு காண் காதை தொடங்கி அடைக்கலக் காதையொடு - **ஆறுகாதை அளவிலோ அவர் அமைந்தார்?**

பதினாறாம் காதையில் ஆம் கொலைக்களக் காதையில்,

*"மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி*

*ஏதம் இல்லா இடம்தலைப் படுத்தினள்"*

என்று பாராட்ட, இருபத்து ஏழாம் காதையில் (நீர்ப்படைக் காதை) அவர் "உண்ணா நோன்போடு உயிர்பதிப் பெயர்த்து" (83) கூற, இருபத்தொன்பதாம் காதையில் (வாழ்த்துக்காதை), "ஐயந்தீர் காட்சியராகத் (8) திகழ - மூன்று காண்டங்களிலும் இடம்பெறும் பெற்றியராக விளங்குகின்றார்.

"சிலம்பு பொருளாக உலந்த பொருளீட்ட எழுக" என எழுந்த கண்ணகி, பூம்புகார் கடக்கு முன்னரே, 'மதுரை மூதூர் யாது?' என்று வினாவும் அவரை, முன்னூறு கல்தொலைவு எப்படிக் கொண்டு செல்வான்? அவர், நகைத்து வினாவினாலும், அவன் நகைப்பொடு ஆறு ஐங்காதமென நயமாகக் கூறினாலும், அவன் உள்ளகம் அலமராதா? இவ் வினாவுதலை எழுப்பிய இடத்துத் தோற்றம் தந்ததொரு தவச்சாலை! ஆங்கு முகம் காட்டியவரே **கவுந்தியடிகள்**. கோவல கண்ணகியர்,

கண்டவர் வணங்கும் தூய வடிவாக விளங்கிய அவரை வணங்கினர்.

தூய தோற்றம்! கட்டமை சமயப் பிடிப்பு அழுந்தி நிற்க,

***"உருவும் குலனும் உயர்பேர் ஒழுக்கமும்***
***பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்***
***உடையீர் என்னோ உறுக ணாளரிற்***
***கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறு?"***

என வினாவுகிறார்.

"கங்குல் கனைசுடர் கால்சீயாமுன்", எவரும் அறியாவாறு புறப்பட்ட அவன் மான உணர்வு, முதற்கண் அதிர்வுக்கு ஆட்படுகின்றது!

அழகும் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் இறைவன் நூலிற் கூறிய
விரதம் தப்பாமையும் என்னும் இவற்றையெல்லாம்
ஒருதலையாக உடைய நீங்கள், **தீவினையாளரைப்போல**
**நுமது இடத்தைக் கழிந்து வருவதற்குக் கருதியது என்னோ**
**என்று கேட்டார்!**

அமர்வித்து, உரையாடி, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட பின்னர் இவ்வினா வினாவப் பட்டிருந்தால், கோவலன் மான அதிர்வு அடைந்திரான். அவன் விரும்பாத வினா எழும்பிய போது என் செய்வான்?

**"உரையாட்டு இல்லை: உறு தவத்தீர்"**

என்று மறுமொழி கூறினான்.

மிக்க தவத்தினை உடையீர் இவ்வினாவிற்கு விடையில்லை என்று சொல்லி, மேலும் அவர் வினவாமல் இருக்கத் தானே பேசினான்:

"யான், மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்"

என்றான். "மதுரை மூதூர்க்குச் சென்று பொருள் தேடும் விருப்புடையேன்" என்ற அளவில் கவுந்தியார், மதுரைத் தொலைவை எண்ணினார்; வழியை எண்ணினார்; கண்ணகியின் மென்மையை எண்ணினார்;

"இவள் சிறிய மெல்லிய அடிகள், பருக்கைக் கல்லாகிய பகையை வெல்ல இயலா; காடு நாடு என்பவற்றைக் கடக்க இவள்நிலை ஏற்றது அன்று; இவற்றை அறிபவர் யார்? மேற்கொண்ட செயல் ஏற்றது அன்று; ஆதலால், செலல் வேண்டா என்று கூறியும் நீர் விடுவதாய் இல்லை" என்றார்.

"பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை இட்ட நாடுநீர் கழிதற்கு
அரிதிவள் செவ்வி அறிகுநர் யாரோ?
உரியது அன்று **ஈங்கு ஒழிகென ஒழியீர்**"

என்பது அது.

"ஈங்கு அமைகென அமையீர்" எனினும் இப்பொருளதே!

செவ்வி என்பதற்கு ஊழ்நிலை அறிவார் எவர்? என்பார்

அடியார்க்கு நல்லார். **பின்வருவது அறிந்து, 'ஒழிகென ஒழியீர்'** என்று கூறியதாகக் கருதிவிடக்கூடாது என்று,

"இவர்க்குத் தவப்பயனாலே **சபித்தல் அன்றிக்**
**கால உணர்ச்சி இன்மை அறிக**"

என்பார். பின்னும் (165) கண்டறி கவுந்தி என்னும் இடத்தும்

**"கால உணர்ச்சி இன்மை அறிக"**

என்பார்.

மதுரைக்குச் செல்ல கவுந்தியார் எண்ணியே இருந்தார் போலும்! அல்லது தாம் செல்ல இருக்கும் திட்டத்தை உடனே மேற்கொள்ள இவர்கள் செலவு தூண்டியிருக்கவும் கூடும்!

"மொழிப்பொருள் தெய்வம் வழித்துணை"யாகக் கொள்பவர்

எனினும் தாம் கோவல கண்ணகியர்க்கு உதவினாற் போலவும், அவர் களொடு கூடித் தாமும் செல்ல வாய்த்தாற் போலவும் கொள்ள நேர்ந்தது ஆகலாம். அதனால்,

*"மறவுரை நீத்த மாசறு கேள்வியர்*
*அறவுரை கேட்டாங்கு அறிவனை ஏத்தத்*
*தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு*
*ஒன்றிய உள்ளம் உடையேன் ஆகலிற்*
*போதுவல் யானும் போதுமின்"*

என்றார்.

"அறிவனை வணங்கத் தமிழ் மதுரைக்குச் செல்லும் கருத்து உடையேன்; ஆதலால் யான் போவேன்; நீங்களும் வருக" என்னும் அவர் சொல் கோவலனுக்கு எதிர்பாரா இன்பமும் வியப்பும் ஆயின! ஊரைவிட்டுத் தாண்டு முன்னரே, போய்ச்சேரும் இடம் யாது எனக் கேட்பவரை நெட்ட நெடுவழி அழைத்துச் செல்வது எப்படி என உழன்ற அவன் உள்ளத்திற்கு ஆறுதல் வாய்க்கவே, அவரை வணங்கி,

*"அடிகள் நீரே அருளுதிர் ஆயின் இத்*
*தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேன்"*

என உவந்துரைத்தான். துயர் தீர்ந்ததாகவே முடிவு செய்துவிட்டான் கோவலன்! காலவழு அவன் களிப்பில் வந்து நின்றது.

கோவல, வயல்வழி சோலைவழி என இரண்டுவழி அல்லது வேறுவழி என ஒன்று இல்லை என்றவர் சோலை வழியில் செல்வது பற்றிக் கூறுகிறார்.

*"கோவலன் காணாய், கொண்ட இந்நெறிக்கு*
*ஏதந் தருவன யாங்கும் பல கேண்மோ"*

என்கிறார். "நாம் நடக்க மேற்கொள்ளும் வழியில் துன்பம் தருவன பலப்பல எங்கும் உள்ளன; அவற்றைக் கூறுகிறேன் கேள்" என்கிறார்.

துயர் தீர்ந்தேன் என்றவன் சொல்லி வாய்மூடுமுன், துன்பம் தருவன எங்கும் பல உள என்பது இன்புறக் கேட்கும் மொழியா? உண்மை எனினும் உளவியல் அறிந்து உளம் தளிர்க்க அல்லவோ கூறவேண்டும்?

கவுந்தியார் சொல்லும் செய்திகள் உள்ளம் தொடுவன! உருக்குவன! ஆனால் அதன் முன்னுரை?

இளவெயிலையும் தாங்கமாட்டாத இம்மென்மையளைச் **சோலை வழியில்** அழைத்துக் கொண்டு செல்வோமானால் நிலம்பிளக்க இறங்கிய வள்ளிக்கிழங்கைத் தோண்டி எடுத்ததனால் ஆய குழிகளைச் சண்பகப் பூக்கள் பொய்யாக மூடிப் பாராது நடப்பார்க்கு மேற்செல்ல இயலாத் துன்பத்தை ஆக்கும்.

அக்குழியைக் கண்டு ஒதுங்கிச் செல்வோரை முதிர்ந்த பலாப்பழங்கள் பகைபோலாகி மோதும்.

மஞ்சளும் இஞ்சியும் கலந்து பயிரிடப்பட்ட தோட்டத்தில் பலாக்கனியின் விதைகள் கிடந்து பருக்கைக் கற்களைப் போல் துயருறுத்தும்.

**வயல் வழியில்** செல்வோமானால் வாளைமீனைக் கவ்விக் கொண்டு நீர்நாய் ஊடறுத்துச் செல்லின் இவள் கலங்குவள்.

கரும்பில் கட்டிய தேன்கூடு முதிர்ந்து சிதைந்து ஒழுகும் தேன், நீரில் கலத்தல் உண்டு. அதனை நீர் வேட்கையால் அள்ளிக்குடிக்கவும் நேரும். (தேன் பருகுதல், சமண சமயத்தாரால் விலக்கப்பட்டவற்றுள் ஒன்று)

களைபறிப்பவர் வயல் வரப்புகளில் போட்ட வேளைப் பூவில் வண்டுகள் புகுந்திருத்தல் உண்டு. நடக்கும் அயர்வால் அப்பூவை மிதித்து விடவும் கூடும்.

வாய்க்கால் வரப்பில் நடக்குங்கால் ஆங்குள்ள ஆண் பெண் நண்டுகளாம் நந்தும் அலவனும் துயர் கொள்ளுதல் கண்டு தாங்க முடியாமை ஏற்படும். நின்னை விரும்பும் இவளுடன்,

அவ்வவ் விடங்களை அறிந்து அவற்றை அணுகாது

பாதுகாப்பாயாக என்றார். காவிரி வடகரை வழி இது.

கவுந்தியடிகள் பிச்சைக்கலம், தோளில் இடும் உறி, மயில்தோகை ஆயவற்றைக் கொள்கிறார் தெய்வ மொழியாம் மந்திரம் வழித்துணையாக என வேண்டிப்புறப்படுகிறார். ஆதலால் தவச்சாலையில் இருந்தே

இவற்றைக் கூறினார் என்பது விளக்கமாம்!

உடன்தான் தாமும் வருகிறாரே! அதன்முன் ஏன் இவ்விரிவுரை? சமயவாணர் உரைத்தலும் கேட்டலும் ஆழங்கால்பட்டுப் பழகிப் போனமுறை! 'கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை' என்பது மடம் என்பதன் பொருளாதல் அறிக.

மக்களே வாருங்கள்! எழில் மிக்க சோலை! இனிய வயல்!பசுமையின்

கொள்ளை! மண்ணின் மலர்ச்சி! உயிர்களின் கிளர்ச்சி! பாருங்கள் பாருங்கள் இயற்கையின் எழில் இருக்கை! எனக் காட்டிக் காட்டிக் களிப்பொடு செல்லலாமே!எத்தனை ஆன்மநேயம்! அச்சம் பிணைக்கிறதே! துயரம் கப்ப ஆகிறதே. இளங்கோவடிகள் கவுந்தியடிகளாக மாறி, படிப்படியே கனிவுறச் செய்யும் எழிலின் படைப்பு இஃது!

வயலும் பொழிலும் ஊரும் தாண்டி ஒரு நாளுக்குக் காதத்தொலைவு என்பதற்கு மேல் நடவாராய்ப் பலநாள் தங்கிச் செல்லும் பொழுது ஒருநாள் ஆற்றுவீ என்னும் அரங்கத்தமைந்த மரச்செறிவமைந்த சோலை ஒன்றனை அடைந்தனர். ஆங்கிருந்ததொரு கல்மேடை (சிலாவட்டம்). அதில் அருகதேவர் நெறிவழாது போற்றும் சாரணர் வந்து தோன்றினர். அவர்களைக் கௌந்தியடிகளொடு கோவல கண்ணகியரும் வணங்கினர். 'முன் செய்த வினை அகல்க' என்று வேண்டினர்.

உள்ளம் என்னும் விளக்கால் அச்சாரணன் இவர்களுக்கு வர இருக்கும் துன்பத்திற்கு வருந்திக் கவுந்தியடிகளை நோக்கி, "எவராலும் ஒழிக்க ஒழியா நுகரச் செய்யும் தீவினையைக் காண்பாயாக. விளை நிலத்து இட்ட வித்துப் போல் வரும் விளைவை ஒழிக்க இயலாது. கடிய காற்றில் வெற்றிடத்து வைக்கப்பட்ட விளக்குப்போல அழியின் அல்லது உடம்பொடு உயிர்கள் நில்லா ஒளி வடிவாகிய அருக தேவனைச் சார்ந்தாலல்லது பிறவி நீங்கார்" என்று சாரணர் தலைவர் கூறினார்.

சாரணர் அறவுரை கேட்ட கவுந்தியார் கைகளைத் தலைமேல் கொண்டு, அருகதேவன் அருளிச் செய்த அறவுரை கேட்கத் தவிரப் பிறவுரை கேட்க என் செவிகள் திறவா. அருகதேவன் திருப்பெயர்களைக் கூறுவதன்றிப் பிற பெயர் கூறாது என் நா.அப்பெருமான் திருவடிகளைக் காண்பதற்கல்லது மற்றையடிகளை என் கண்கள் காணா. அவனை அன்றிப் பிறரை நிலத்தில் வீழ்ந்து வணங்காது என் மெய். அவனை வணங்க அன்றி என் கைகள் குவியா. அவன் அடியை அல்லது என் தலை எவரையும் வணங்காது. அவன் அருளிய ஆகமத்தை ஓதிப் பூரிப்பதன்றிப் பிறிதொன்றை ஓதிப் பூரியாது என்மனம் என்று கூறிய கவுந்தியடிகள் உரையைக் கேட்ட சாரணர் ஒரு முழம் எழுந்து, **"பிறப்பினைத் தரும் பாசம் கவுந்திக்குக் கெடுவதாக"** என்று கூறி வான் வழியே சென்றனர். பின்னர் மூவரும் காவிரியாற்றைப் பள்ளியோடத்தால் கடந்து தென்கரையை அடைந்து ஒரு சோலைக்கண் தங்கினர்.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# குயில் பாட்டில் மெய்ப்பாடு

பேரா **செ.வை.சண்முகம்**
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
கைபேசி: 98651 96476

**சென்ற இதழின் தொடர்ச்சி**

**4.2.5. முனிவர் கூற்று**

முனிவர் கூற்று (248-346) நீண்ட உரையாடலாக அதுவும் பல மாந்தர்கள் பற்றிய வாழ்வியல் நிகழ்வுகளாக இருப்பதால் இரு கதை மாந்தர்கள் தங்களுக்குள் உரையாடியதை அப்படியே கொடுத்து அது 'என்று உரைத்தாய்' (268) என்பது போன்று நேர்க் கூற்று (direct speech) அயல் கூற்றாகச் (indirect speech) சில இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முனிவர் பேச்சிலே மெய்ப்பாடு எதுவும் அமையவில்லை. முனிவர் மனப்பக்குவம் உடையவர் என்பதும் அவர் பேச்சு பிற கதைமாந்தர்களின் வரலாறு என்பதும் காரணமாக இருக்கலாம். இடையே இரண்டு கதைமாந்தர் உரையாடலாக அமைந்த பகுதியில் மெய்ப்பாடுகள் அமைந்துள்ளன.

குயிலி நெட்டைக் குரங்கன் திருமணம் உறுதியானதும் குயிலைக் காதலித்த மாடன் என்பவன் குயிலிடம் பேசும்போது 'மாடன் மனம் புதைந்து மற்றை நாள் உன்னை வந்து / நாடிச் சினத்துடனே நானா மொழி கூற' (263) என்னும் போது மாடனிடம் வெகுளி மெய்ப்பாடு அமைந்துள்ளது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சேர அரசன் மகன் குயிலிடம் 'வேடர் தலைமகளே! விந்தை அழகுடையாய்! / ஆடவனாத் தோன்றி அதன் பயன் இன்று பெற்றேன் / கண்டதுமே நின்மிசைநான் காதல் கொண்டேன்' (279) என்று கூறும்போது சேரன் மகன் பேச்சில் உவகை மெய்ப்பாடு அமைந்துள்ளது.

பின்னர் அவன் 'நீயே மனையாட்டி நீயே அரசாணி' (291) என்று பல பேசி இறுதியில் 'வேத நெறியில் விவாகமுனைச் செய்து கொள்வேன் / மாதரசே! என்று வலக்கைத் தட்டி வாக்களித்தான்' (294). அதைக் கேட்டுப் 'பூரிப்பு கொண்டாய் புளக நீ எய்திவிட்டாய் / வாரிப் பெருந் திரைபோல் மகிழ்ச்சியிலே / நாணந் தவிர்த்தாய்.... காணத் தெவிட்டாத

இன்பக் கனவிலே சேர்ந்துவிட்டாய்' (295-6) என்ற கேட்போர் என்ற முறையில் குயிலின் புணர்வு காரணியால் ஏற்படும் உவகை மெய்ப்பாட்டின் வெளிப்பாடு.

இருவரும் மகிழ்ச்சியில் இருக்கும்போது பார்த்த எதிர்வினை காண்போர் வெகுளி மெய்ப்பாடாகக் கருதத்தக்கது. 'ஆத்திரந்தான்நின்னை ஆங்கெய்திக் காண வந்தோன் (301) /..... பட்டப்பகலிலே பாவிமகள் செய்தியைப் பார் (302).... என்று பல பேசி என்று மனதில் எழுகின்ற தீயுடனே நின்று கலங்கினான்' (305) என்னும்போது 'மனதில் எழுகின்ற தீ' என்றது வெகுளி மெய்ப்பாட்டின் காரணி.

சேர அரசன் மகன் குயிலியோடு கொஞ்சிக் கொண்டிருந்ததைப் பார்த்த குரங்கனும் மாடனும் அவன் முதுகில் குத்தியதால்' மன்னவனும் சோர்வெய்தி மண்மேல் விழுந்துவிட்டான்' (319). குயிலி மடியில் எடுத்து வைத்ததும் கண்விழித்துப் பேசினான். 'பெண்ணே! இனிநான் பிழைத்திடேன், சில் கணத்தே / ஆவிதுறப்பேன் அழுதோர் பயனில்லை/ சாவிலே துன்பமில்லை. தையலே! இன்னமும் நாம்/ பூமியினிலே தோன்றிடுவோம். பெண்ணே! நினைக்கண்டு/ காமுறுவேன், நின்னைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன்/ இன்னும் பிறவியுண்டு, மாதரசே! இன்பமுண்டு/ நின்னுடனே வாழ்வன் நேரும் பிறப்பினிலே/ என்று சொல்லி' (321-4)' என்ற அடிகள் துன்பத்திலும் வாழ்வில் தன்னம்பிக்கை உணர்வின் வெளிப்பாடு. இதைப் பெருமித மெய்ப்பாடாகக் கருதத் தோன்றுகிறது. அதன் உச்சகட்டமாக '(என்று சொல்லிக்) கண் மூடி, இன்புறு புன்னகைதான்/ நின்று முகத்தே நிலவுதர மாண்டனன் காண்' (325) என்றது இறப்பினும் மகிழ்ச்சி என்று முரண் போலத்தோன்றினாலும் புலன் (அறிவுடைமை) காரணமாகவும் தன்னம்பிக்கை காரணமாகவும் தோன்றும் நேரடி உவமை மெய்ப்பாடு என்று கொள்ளலாம். '.... என்றந்தத்/ தென்பொதியை மாமுனிவர் செப்பினார் சாமீ' (329-30) என்பது முனிவரின் கூற்று பிறர் கூற்றாக அமைத்துக் கவிஞரிடம் கூறியதாகும்.

330வது அடியைப் பொறுத்தவரையில் கவிதை நோக்கில் புதைந்துள்ள ஒரு சிறப்பு சுட்டிக்காட்டத் தகுந்தது. அந்தக் கண்ணி ஒரு அடியாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பில் அச்சிடப்பட்டுள்ளது. காரணம் இரண்டு அடி கொண்ட ஏனைய அடிகள் அடித்தொடை

அதாவது அடியின் முதல் சீர் எதுகை/ மோனை பெற்றிருக்கும். அந்த முறையில் முன்னும் (329) பின்னும் (331) உள்ள கண்ணிகள் அடி எதுகை பெற்றுத் தனிக் கண்ணி என்று கருதும்படி அமைந்துள்ளது. இதனால் தனி அடி தனிக் கண்ணியாகக் கருதப்பட்டுள்ளது.

'குயில் உருவம் கொண்டேன் யான்; கோமகனோ மேன்மை/ பயிலு மனிதவுரு பற்றி நின்றேன்' (331) என்று குயிலி முதலில் முனிவரிடம் பேசிய பேச்சில் பெருமை காரணமாக மருட்கை மெய்ப்பாடும்; அடுத்துத் 'தார் வேந்தன் கூறிய சொல்/ பொய்யாய் முடியாதோ' (332-3) என்று கூறியதில் இழவு (இழத்தல்) என்ற காரணத்தால் அழுகை மெய்ப்பாடும் அமைந்துள்ளன.

ஆனால் அதைக் கேட்ட முனிவர் 'புன்னகையில் உரைப்பர் (333) என்றது இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகக் கொள்ளும் அவருடைய மனப்பக்குவத்தின் வெளிப்பாடு. அதைத் தறுகண்மை என்ற காரணத்தால் உண்டான பெருமித மெய்ப்பாடு என்று கொள்ளலாம். அதே சமயத்தில் 'அடி பேதாய்! என்று விளித்து (333).... 'கர்ம வசத்தினால்.... காடு மலை சுற்றி வருகையிலே கண்டுகொண்டார் (335).... நீயிதனைத் தேர்கிலையோ? என்றார்' (337) என்று முனிவர் கூறியது அவருக்கும் மென்மை காரணமாகத் தோன்றிய இளிவரல் மெய்ப்பாடாகக் கருதலாம்.

முனிவர் பேச்சில் தற்கால வழக்குக்குப் பதிலாகச் செவ்வழக்கு அல்லது தொல் வழக்கு அமைந்துள்ளது கவனிக்கத்தகுந்தது. இப் (பிறவி) (333, 336) இந்த '(கர்ம) வசத்தினால்' (334, வசத்தால்), வன் (பேயாய்) (335, வலிய), 'நின் (336, 337 (2), உன்), 'சேர்வை' (336, சேர்வாய்), சுற்றுகின்றார் (337, சுற்றுகிறார்). இவை அவரின் சமூக உயர்வின் வெளிப்பாடாகக் கருதலாம்.

ஆனாலும் முனிவர் - குயிலி உரையாடல் தொடர்ந்து 'பிந்தி விளைவதெல்லாம் பின்னேநீ கண்டுகொள்வாய்' (346) என்று மறைந்துவிட்டார்.

### 4.2.6. குயில் – கவிஞர் (கதை மாந்தர்)

முனிவர் - குயிலி கருத்தாடலை இந்தப் பிறவியில் குயில் கவிஞரிடம் 'காதலரே!/ மாற்றியுரைக்கவில்லை. மா முனிவர் சொன்னதெல்லாம்/ அப்படியே சொல்லிவிட்டேன். ஐயோ! திருவுளத்தில்/ எப்படி நீர் கொள்வீரோ? யானறியேன். ஆரியரே! காதல் அருள்புரிவீர்.

காதலில்லை யென்றிடிலோ/ சாதல் அருளித் தமது கையால் கொன்றீடுவீர்" என்று (347- 9) கூறிக் கவிஞர் கையில் வீழ்ந்தது (350).

குயில் பேச்சில் அமைந்துள்ள சிறப்பொருமை (honorific singular), தொல்வழக்கு (திருவுளம், நீர், யான்) பயன்பாடுகள் பேச்சில் ஒரு பெருமித உணர்வு அமைந்துள்ளதைப் புலப்படுத்துகிறது. அதன் காரணம் என்ன? அது தன்னம்பிக்கை உணர்வு எ்ன்று கருதலாம்.

கவிஞரும் காதலர் என்ற முறையில் 'கொன்றுவிட மனந்தான் கொள்ளுமோ? பெண்ணென்றால் / பேயும் இரங்காதோ? 350-1) என்று தொடர்ந்து மூன்று கேள்வி (கொள்ளுவதோ? (351), நிற்பதுண்டோ? உளரோ?' (352) என்ற வினா வாக்கியங்கள் உடன்பாட்டுப் பொருளில் அமைந்துள்ளது இரக்க உணர்வின் வெளிப்பாடு.

அடுத்து 'அன்புடனே யானும் அருங்குயிலைக் கைக்கொண்டு/ முன்பு வைத்து நோக்கியபின் மூண்டு வரும் இன்ப வெறி/ கொண்டதனை முத்தமிட்டேன்' (353-4) என்பது புணர்வு நிமித்தமான உவகை மெய்ப்பாடு ஆகும்.

'கோகிலத்தைக் காணவில்லை/ விண்டுரைக்கமாட்டாத விந்தையடா! விந்தையடா! ஆசைக்கடலின் அமுதடா! அற்புதத்தின் / தேசமடா! பெண்மைதான் தெய்வீகமாங் காட்சியடா! (354-5) என்பதில் உயர்வு நவிற்சியும் (அமுது, தெய்வீகம்) ஐந்து வியப்புத் தொடரும் மருட்கையின் உச்சம். அதை ஆக்கத்தின் (ஒன்றன் பரிணாமம்) காரணம் என்று கருதத் தோன்றுகிறது. மேலும் கேட்பவராக இருந்த கவிஞர் பேசுபவராக மாறி வாசகரைக் கேட்பவராக மாற்றிப் பேசுகிறார் என்ற மாற்றம் நடைபெற்றுள்ளது சுட்டிக் காட்டத்தகுந்தது.

ஆனாலும் முதலில் இரக்கம்; பின்பு, உவகை; தொடர்ந்து மருட்கையின் உச்சம் என்று கவிஞர் ஒரு கதைமாந்தராய் தொடர்ந்து மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் கவிஞர் 'சாமீ இவள் அழகை/ எற்றே தமிழில் இசைத்திடுவேன்' (357) என்னும் போது கவிஞர் பேசுபவராகவும் வாசகர் கேட்பவராகவும் மாறித் தன்னுடைய எதிர்வினையைத் தான் கவிஞர் என்ற முறையில் மிகைப்படுத்திப் பேசியுள்ளார். ஒரு இடத்தில் தன் உணர்வை முழுவதும் மொழி மூலம் விளக்கமுடியாது என்பதை 'மீள விழியால் மிதந்த கவிதையெலாம் சொல்லில் அகப்படுமோ' (358-9) என்று கூறியதில் 'மீள விழியால் மிதந்த கவிதையெலாம்' என்பது உருக்கமாகக் காதல் உணர்வு விளக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தகுந்தது. அதை 5

கண்ணிகளில் (359-64) விளக்கியுள்ளார். அங்கும் 'மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ' (362) என்று கூறியது 'மற்றவர்க்கு' என்று கேட்பவர் வாசகர் என்ற மாற்றத்தையும் 'சொல்ல வசமாமோ' என்று உணர்வை வெளிப்படுத்த மொழியின் பற்றாமையும் புலப்படுத்தியுள்ளார். அதே சமயத்தில் இதை எல்லோராலும் புரிந்துகொள்ள முடியாது என்று உணர்ந்து வாசகர் வட்டத்தைக் கற்றவர்க்குச் சொல்வேன்' (362) என்று வாசகர் வட்டத்தைக் குறுக்கிவிட்டார்.

பெண்ணவளைக் கண்டு பெருங்களி கொண் டாங்ஙனே நண்ணித் தழுவி... சித்தம் மயங்கிச் சிலபோழ்து இருந்த பின்' (366) செயல் மூலம் புணர்வு காரணமாக உவமை மெய்ப்பாடு புதைந்துள்ளது தெளிவு.

பக்கத்திருந்த மணிப் பாவையுடன் சோலையெலாம்/ ஒக்க மறைந்தது' (367) அனைத்தும் கனவு என்று உணர்ந்ததன் வெளிப்பாடு. அப்போது "ஓஹோ"வெனக் கதறி வீழ்ந்தேன்' (367-8) என்னும்போது முதலில் மருட்கையும் ("ஓஹோ"வென) உடனே அழுகையும் ('கதறி') மெய்ப்பாடுகளாக அமைந்துள்ளன.

'கற்றவர்' என்பதைக் கேட்பவர் வட்டத்தைக் குறுக்கியதால் இதுவரை தன்னுடைய வாழ்வு நிகழ்வுகளைச் சொல்லி வந்தவர் இறுதியில் இன்னும் வாசகர் வட்டத்தை 'ஆன்றதமிழ்ப் புலவீர்' (371) குறுக்கி 'வேதாந்தமாக விரித்துப் பொருளும் உரைக்கு'ம்படி பணிவான வேண்டுகோளைக் கவிஞரே 'ஆன்றதமிழ்ப் புலவீர்' (371) தலையில் ஒரு கடமையைச் சுமத்தி முடிவுரைத்துவிட்டார்.

### 5. முடிவுரை

குயில் பாட்டு மெய்ப்பாட்டு ஆய்வு மெய்ப்பாடு பற்றிச் சில உண்மைகளைப் புலப்படுத்தியது குறிப்பிடத்தகுந்தது. பொதுவாகப் பேசுவோர், கேட்போர் ஆகிய இருவரின் மெய்ப்பாட்டோடு காண்பவர் என்ற கூறின் மெய்ப்பாடும், முன்னர் நடந்த நிகழ்வுகளை நினைக்கும் மனதில் மெய்ப்பாட்டு உணர்வு தோன்றுவதும், கவிதைக் கருத்தாடலில் பேசிக் கொண்டிருக்கும் போது நேரடிக் கேட்பவரைத் தாண்டி உலகத்தவரைக் கேட்போராகக் கருதிப் பேசி மெய்ப்பாட்டை வெளிப்படுத்துவதும் குயில்பாட்டில் அமைந்துள்ளன.

இது ஒரு முதல் முயற்சி. எனவே அது பற்றி விரிவான வாதவிவாதங்கள் தேவை.

## அடிக்குறிப்பு

1. கட்டுரையைப் படித்துக் கருத்துரைத்த பேரா.கு.சிவமணி அவர்களுக்கு நன்றி.

## துணையன்கள்

அய்யப்ப பணிக்கர் கெ.2012 **இந்திய இலக்கியக் கோட்பாடுகள்** சூழல் - பொருத்தம்,
தமிழில் மொழியாக்கம் மனோகரன், ந. மாற்று, சென்னை.

சண்முகம், செ.வை.2013, 'சங்கப் பாடல்களில் மெய்ப்பாடு', **கவிதைக் கட்டமைப்பு** (சண்முகம், செ.வை) ப 197-225, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை

தமிழண்ணல் 1986, **தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்: மெய்ப்பாடு**, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை

**தொல்காப்பியம் முழுவதும் விளக்கவுரை**, (ப-ர், சுப்பிரமணியன், ச.வே) மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2008.

**தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம்**. ப-ர். வெள்ளைவாரணன், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1986.

பாலசுப்பிரமணியன், க, 2016, **தொல்காப்பியப் பொருளடைவு**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## செய்நன்றி

*தமிழ்நாட்டில் ஒருதமிழன் சரித்திரத்தில் உழன்றே*
*தாய்மொழியைத் தமிழ்மொழியை கற்கவில்லை என்றால்*
*தமிழரெனும் அனைவருக்கும் அதுவெட்க மன்றோ?*
*தமிழனெனத் தனைச்சொல்லிக் கொள்கின்ற மக்கள்*

*தமிழ்நாட்டில் அறிவின்மை தனையோட்ட வேண்டும்!*
*தாய்மொழிக்குச் செய்கின்ற செய்நன்றி என்ன?*
*தமிழ்க்கல்வி கல்லாத ஒரு தமிழன் இந்தத்*
*தமிழ்நாட்டில் இல்லாமல் வெண்டும்! உண்மை!*

# இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி - 605008
கைபேசி: 9443151044

**சென்ற இதழின் தொடர்ச்சி**

பகுதி - 3

3.1 இனி பிற திராவிட மொழிகளில் காணப்படும் இறந்தகாலப் பகுதிகளைப் பற்றிச் சிந்திக்கலாம். கோத்தம், தொதுவம், கொடகு ஆகிய தென் திராவிடக் குழுமத்தைச் சேர்ந்த மொழிகளும் தெலுங்கு, கொண்ட, குவி, குயி, கோலாமி, பர்ஜி, கதப (Gadaba) ஆகிய நடுவண் திராவிடக் குழுமத்தைச் சேர்ந்த மொழிகளும் வட திராவிடக் குழுமத்தைச் சேர்ந்த மால்தோ என்ற மொழியும் இந்த வகையில் கருத்தில் கொள்ளப்படும்.

3.2 கோத்தம்: இறந்தகால விகுதிகளாக **-d-**, **-t-**, **-c-** ஆகியவை கோத்த மொழியில் காணப்படுகின்றன.

22.0 வினைப்பகுதி: வார் ‘வா’; இறந்தகாலப்பகுதி:வத்-(vad-)‘வந்து’

| | |
|---|---|
| (1) *வரின்றஉ > வரின்று | (இன்றஉ > இன்று) |
| (2) வரின்று > வரிந்து | (இன்று > இந்து) |
| (3) வரிந்து > வரிது | (ந் > $\phi$/-த்) |
| (4) வரிது > வர்து | (இ> $\phi$/ர்-த்) |
| (5) வர்து > வத் (vad-) | ( ர் > $\phi$/த்) |

23.0 வினைப்பகுதி: சேர்; இறந்தகாலப்பகுதி: சேத்- (cēd-) ‘சேர்ந்து’

| | |
|---|---|
| (1) *சேரின்றஉ > சேரின்று | (இன்றஉ > இன்று) |
| (2) சேரின்று > சேரிந்து | (இன்று > இந்து) |
| (3) சேரிந்து> சேரிது | (ந் > $\phi$/ -த்) |
| (4) சேரிது > சேர்து | (இ > $\phi$/ர்-த்) |
| (5) சேர்து > சேத் (cēd-) | (ர் > $\phi$/-த்) |

24.0 வினைப்பகுதி: உண்; இறந்தகாலப்பகுதி: உட் -(uḍ-) ‘உண்டு’

| | |
|---|---|
| (1) *உணின்றஉ > உணின்று | (இன்றஉ > இன்று) |

(2) உணின்று > உணிந்து (இன்று > இந்து)

(3) உணிந்து > உணிது (த்த் > த்)

(4) உணிது > உண்து (இ > ϕ/ண-த்)

(5) உண்து > உண்டு (த் > ட்/ண-)

(6) உண்டு > உடு > உட் (uḍ) (ண >/-ட்)

25.0 வினைப்பகுதி: தட்வ் (taṟv)'தடு'; இறந்தகாலப்பகுதி: தட்த் (taṟt-)

(1) *தடு-ன்றஉ > தடுற்று (ன்றஉ > ற்று)

(2) தடுற்று > தடுத்து (ற்று > த்து)

(3) தடுத்து > தடுத்(உ) (த்த் > த்)

(4) தடுத் > தட்த் (tart-) (உ > ϕ/-த்)

26.0 வினைப்பகுதி: உக் (ug) 'உழு', இறந்தகாலப்பகுதி: உட்த் (uṛt) 'உழுது'

(1) *உழு-ன்றஉ > உழுற்று (ன்றஉ > ற்று)

(2) உழுற்று > உழுத்து (ற்று > த்து)

(3) உழுத்து > உழுத்உ (த்த் > த்)

(4) உழுத்உ > உழ்;த்(உ) (உ > ϕ/-த்)

(5) உழ்த் > உட்த் (uṛt-) (ழ்>ṛ)

27.0 வினைப்பகுதி : ஆர்; இறந்தகாலப்பகுதி: ஆத் (àt-) 'அழைத்து'

(1) *ஆரின்றஉ > ஆரிற்று (இன்றஉ > இற்று)

(2) ஆரிற்று > ஆரித்து (இற்று > இத்து)

(3) ஆரித்து > ஆரித்உ (த்த் > த்)

(4) ஆரித்உ > ஆர்த்(உ) (இ > ϕ /-த்)

(5) ஆர்த் > ஆத் (ர் > ϕ/-த்)

28.0 வினைப்பகுதி: கேள்; இறந்தகாலப்பகுதி: கேட்- 'கேட்டு'

(1) *கேளின்றஉ > கேளிற்று (இன்றஉ > இற்று)

(2) கேளிற்று > கேளித்து (இற்று > இத்து)

(3) கேளித்து > கேளித்(உ) (த்த் > ϕ த்)

(4) கேளித் > கேள்த் (இ > ϕ /-த்)

(5) கேள்த் > கேள்ட் (த் > ட்/ள-)

(6) கேள்ட் > கேட்ட் (ள் > ட்/-ட்)

(7) கேட்ட் > கேட் (ட் > ϕ /-ட்)

29.0 வினைப்பகுதி: குர் (<குறு) 'பறி/குற்று'; இறந்தகாலப்பகுதி: குத்- 'குற்றி'

(1) *குறு-ன்ற்உ > குறுற்று (ன்ற்உ > ற்று)

(2) குறுற்று > குறுத்து (ற்று > த்து)

(3) குறுத்து > குறுத்(உ) (த்த் > த்)

(4) குறுத் > குற்த் (உ > ϕ /-த்)

(5) குற்த் > குத் (ற் > ϕ /-த்)

30.0 வினைப்பகுதி: கல்; இறந்தகாலப்பகுதி: கத்- 'கற்று'

(1) *கலின்ற்உ > கலிற்று (இன்ற்உ > இற்று)

(2) கலிற்று > கலித்து (இற்று > இத்து)

(3) கலித்து > கலித் (உ) (த்த் > த்)

(4) கலித் > கல்த் (இ > ϕ /-த்)

(5) கல்த் > கத்- (ல் > ϕ /-த்)

31.0 வினைப்பகுதி: காட் 'காட்டு'; இறந்தகாலப்பகுதி: காச்- 'காட்டி'

(1) *காட்டின்ற்உ > காட்டிற்று (இன்ற்உ > இற்று)

(2) காட்டிற்று > காட்டிச்சு (இற்று > இச்சு)

(3) காட்டிச்சு > காட்டிச்(உ) (ச்ச் > ச்)

(4) காட்டிச் > காட்ச் (இ > ϕ /-ச்)

(5) காட்ச் > காச் (ட் > ϕ /-ச்)

32.0 வினைப்பகுதி: ஓட் (ōṛ) 'ஓடு'; இறந்தகாலப்பகுதி: ஓச்- 'ஓட்டி'

(1) 'ஓடின்ற்உ > ஓடிற்று (இன்ற்உ > இற்று)

(2) ஓடிற்று > ஓடிச்சு (இற்று > இச்சு)

(3) ஓடிச்சு > ஓடிச்உ (ச்ச் > ச்)

(4) ஓடிச்(உ) > ஓட்ச்(உ) (இ > ϕ /-ச்)

(5) ஓட்ச் > ஓச் (ட் > ϕ /-ச்

33.0 வினைப்பகுதி: தோட் (tōḍ) 'தோண்டு'; காலப்பகுதி; தோஜ் - 'தோண்டி'

(1) *தோண்டின்ற்உ_ > தோண்டின்று (இன்ற்உ_> இன்று)

(2) தோண்டின்று > தோண்டிஞ்சு (இன்று > இஞ்சு)

(3) தோண்டிஞ்சு > தோண்ட்ஞ்சு (இ > ϕ /-ஞ்ச்)

(4) தோண்ட்ஞ்சு > தோஞ்ச்(உ_) (ண்ட்/ ϕ -ஞ்ச்)

(5) தோஞ்ச் - > தோஜ் (ஞ்ச் > ஜ்)

3.3 தொதுவம்: இறந்தகால விகுதிகள்: -த்- (θ -), -d-, -த்-, -ச்-

34.0 வினைப்பகுதி: மற் 'மற'; இறந்தகாலப்பகுதி: marθ - 'மறந்து'

(1) *மறயின்ற்உ_ > மறயின்று (இன்ற்உ_ > இன்று)

(2) மறயின்று > மறயிந்து (இன்று > இந்து)

(3) மறயிந்து > மறய்ந்து (இ > ϕ /-ந்த்)

(4) மறய்ந்து > மறய்து (ந் > ϕ /-த்)

(5) மறய்து > மறது (ய் > ϕ /-த்)

(6) மறது > மற்த் (marθ) (அ > ϕ /-த்)

35.0 வினைப்பகுதி: கொள் (<*கள்) 'களவாடு'; காலப்பகுதி: கொள்த் - (kolḍ-) 'கட்டு'

(1) *கொளின்ற்உ_ > கொளின்று (இன்ற்உ_ > இன்று)

(2) கொளின்று > கொளிந்து (இன்று > இந்து)

(3) கொளிந்து > கொளிது (ந் > ϕ /-த்)

(4) கொளிது > கொள்த்(உ_) (kolḍ-) (இ> ϕ /-த்)

36.0 வினைப்பகுதி: tīn'தின்'; இறந்தகாலப்பகுதி: தீத் (tīd-)'தின்று'

(1) *தீனின்ற்உ_ > தீனின்று (இன்ற்உ_ > இன்று)

(2) தீனின்று > தீனிந்து (இன்று > இந்து)

(3) தீனிந்து > தீனிது (ந் > ϕ /-த்)

(4) தீனிது > தீன்து (இ > ϕ /-த்)

(5) தீன்து > தீந்து (ன் > ந் /-த்)

(6) தீந்து > தீத் (tīḍ) (ந் > ϕ /-த்)

37.0 வினைப்பகுதி: ஒள் (>*ஆள்); இறந்தகாலப்பகுதி: ஒட் -(ōḍ-) 'ஆண்டு'

(1) *ஓளின்ற்உ > ஓளின்று (இன்ற்உ > இன்று)

(2) ஓளின்று > ஓளிந்து (இன்று > இந்து)

(3) ஓளிந்து > ஓளிது (ந் > ϕ /-த்)

(4) ஓளிது > ஓள்து (இ > ϕ /-த்)

(5) ஓள்து > ஓள்டு (த் > ட்/ள்-)

(6) ஓள்டு > ஓடு (ள் > ϕ /-ட்)

(7) ஓடு > ஓட் (ōḍ-) (-உ >-ϕ )

38.0 வினைப்பகுதி: பூ (<*பூய்); இறந்தகாலப்பகுதி: பூத் (pūt) 'பூத்த்து'

(1) *பூயின்ற்உ > பூயிற்று (இன்ற்உ > இற்று)

(2) பூயிற்று > பூயித்து (இற்று > இத்து)

(3) பூயித்து > பூயித்உ (த்த் > த்)

(4) பூயித்உ > பூய்த்(உ) (இ > ϕ /-த்)

(5) பூய்த் > பூத் (pūt) (ய் > ϕ /-த்)

39.0 வினைப்பகுதி: தீய்; இறந்தகாலப்பகுதி: தீச்- 'தீய்த்து'

(1) *தீயின்ற்உ > தீயிற்று (இன்ற்உ >இற்று)

(2) தீயிற்று > தீயித்து (இற்று > இத்து)

(3) தீயித்து > தீய்த்து (இ > ϕ /-த்த்)

(4) தீய்த்து > தீய்ச்ச் (உ) (த்த் > ச்ச் /ய்-)

(5) தீய்ச்ச் > தீச்ச் (ய் > ϕ /-ச்ச்)

(6) தீச்ச் > தீச் (ச்ச் > ச்)

40.0 வினைப்பகுதி : கோய் 'காய்' (to be hot); காலப்பகுதி: கோஸ் - 'காய்ந்து'

(1) *கோயின்ற்உ > கோயிற்று (இன்ற்;உ > இற்று)

(2) கோயிற்று > கோயித்து (இற்று>இத்து)

(3) கோயித்து > கோயித்உ (த்த்>த்)

(4) கோயித்உ > கோய்த்உ (இ > ϕ /-த்)

(5) கோய்த்உ > கோய்ச்உ (த் > ச்; /ய்-)

(6) கோய்ச்உ > கோசு (ய் > ϕ /-ச்)

(7) கோசு › கோஸ்- (ச் ›ஸ்)

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# தொல்காப்பியம் கூறும் கவிதை மொழி

பேரா **ப.மருதநாயகம்**
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113
கைபேசி: 94427 87727

**சென்ற இதழின் தொடர்ச்சி**

மோசி என்னும் கவிஞர் "திருந்து மொழி மோசி" என்று பாராட்டப்படுவார். மேலைக்கவிஞரும் திறனாய்வாளருமான கோலரிட்சு (Coleridge), கவிதையை "the best words in the best order" என்றே வரையறை செய்வதோடு, டேனியல் என்னும் ஆங்கிலக்கவிஞரை 'well - languaged Daniel' என்று குறிப்பிடக் காணலாம்.

*இயற்சொற் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று*
*அனைத்தே செய்யுள் ஈட்டச்சொல்லே.* (397)

(இயற்சொல் திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கும் செய்யுள் இயற்றுவதற்குரிய சொற்களாகும்.)

இவ்வாறு செய்யுளுக்குரிய சொற்களென்று இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கையும் தொல்காப்பியர் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதன் சிறப்பைப் பிறமொழிக்கவிதை வரலாறுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் தெளிவாக உணர்ந்து கொள்ளமுடியும். வடமொழி பேச்சு வழக்கற்ற மொழியாக இருந்ததால் அதில் கவிதைக்குரிய மொழிபற்றிய எண்ண வளர்ச்சிக்கு இடமிருக்கவில்லை. ஆங்கிலத்தை எடுத்துக்கொண்டோமானால் ஆங்கிலேயர் இலத்தீன் மொழி யாப்பிலக்கணத்தைப் பெரிதும் தழுவிய யாப்பிலக்கணத்தையே தங்களுக்கு அமைத்துக்கொண்டனர். ஒரு நீண்ட தொடர் இலக்கணப்பிழை அற்றதா என்று அறிய அதனை இலத்தீன் மொழிக்குப் பெயர்த்து இலத்தீன் இலக்கணத்திற்கு ஏற்புடையதாயிருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தலைசிறந்த ஆங்கிலக்கவிஞரும், உரைநடை ஆசிரியரும், மொழிபெயர்ப்பாளருமாகிய டிரைடன் (Dryden) கூறுவார். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை அம்மொழிக்கவிஞர்கள் காப்பியங்களிலும் துன்பியல் நாடகங்களிலும் கையாளுதற்குரியதென்று செய்யுள்மொழி (Poetic diction) என்ற ஒன்றையே தேர்ந்தெடுத்துக்கொண்டனர். பெரிதும்

பேச்சுவழக்கிலுள்ள சொற்கள் கவிதைக்கு வளம் ஊட்டும் என்றும் எச்சொல்லும் அதற்குப் பொருத்தமான சூழலில் வைக்கப்பெறும்போதே உணர்ச்சியைத் தூண்டும் உயிர்பெற்ற சொல்லாகும் என்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே வேர்ட்சுவொர்த் (Wordsworth) என்ற புனைவியல் கவிஞர் அறிவித்துச் செயல்படுத்தினார். பின்னரே ஆங்கிலேயர் சமுதாயத்தின் அடித்தட்டில் இருப்பார் மொழியைத் தவிர்த்தலைக் கைவிட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜான்சன் (Johnson) எனும் பெருங்கல்வியாளர் சேக்ஸ்பியர் தமது துன்பியல் நாடகங்களில் உயர்மட்டத்துச் சொற்களிருக்கும்போது அடிமட்டத்துப்பேச்சு வழக்குச்சொற்களைக் கையாண்டிருக்கிறாரென்று அம்மாபெருங்கவிஞரைக் கண்டித்திருக்கக் காணலாம். இருபதாம் நூற்றாண்டுப் படைப்பிலக்கியங்களிலேயே ஆங்கிலேயரும், அமெரிக்கரும் வட்டார வழக்குச் சொற்களைப் பெரிதும் பயன்படுத்தி வெற்றிபெற்றனர்.

இயற்சொல்லோடு தக்க இடங்களில் திசைச்சொல், திரிசொல், வடசொல் ஆகியவற்றை உரியமுறையில் பயன்படுத்திச் செய்யுளுக்கு உயிரூட்டி முருகியல் இன்பத்தை மிகுவிக்கலாம் என்பதைத் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழர் அறிந்திருந்தனர் என்பது வியப்புக்குரிய வரலாற்று உண்மையாகும். தொல்காப்பியத்தின் செய்யுளியலுக்கு உரைவரையும் பேராசிரியர் செய்யுள் மொழி பற்றி அரிய கருத்துக்களைச் சொல்வார். வழக்கிலுள்ள சொற்கள் கவிதைக்கு வளம் சேர்ப்பன என்றும் வழக்கிறந்த சொற்கள் தவிர்க்கப்பட வேண்டியவை என்றும் அவர் கூறும்போது செய்யுள் பற்றிய தமிழர் சிந்தனை எவ்வளவு ஆழமானது என்பதை அறியலாம்.

*அவற்றுள்*
*இயற்சொல் தாமே*
*செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்*
*தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே, (398)*

(இயற்சொல் என்பது செந்தமிழ் வழங்கும் நிலத்து வாழும் மக்களின் இயல்பான வழக்கோடு பொருந்தி அத்துடன் கொடுந்தமிழ் பேசுகின்ற நிலத்தில் வாழ்வோர்க்கும் பொருளைத் தடுமாற்றம் இன்றி உணர்த்தும் தன்மை உடையதாகும்.)

இயற்சொல்லுக்கும் நிலம், நீர், தீ, வளி, சோறு, கூழ், பால், தயிர், மக்கள், மா, தெங்கு, கமுகு போன்றவற்றைச் சான்றுகளாகத் தருவர்.

*ஒருபொருள் குறித்த வேறு சொல்லாகியும்*
*வேறு பொருள் குறித்த ஒரு சொல்லாகியும்*
*இருபாற்று என்ப திரிசொற்கிளவி (399)*

(ஒரு பொருள் குறித்து வரும் வேறுபல சொற்களும், வேறுபல பொருள் குறித்துவரும் ஒரு சொல்லும் என்று திரிசொல் இருவகைப்படும் என்பர்.)

வெற்பு, விலங்கல், விண்டு என்னும் சொற்கள் மலை என்னும் ஒரு பொருளைக்குறிக்கும்.

உந்தி என்னும் சொல் யாழ்ப்பத்தர் உறுப்பு, கொப்பூழ், தேர்த்தட்டு, காட்டாறு என்னும் பல பொருள்களைக் குறிக்கும்.

திரிந்து வழங்குவது திரி சொல்லாகும். திரிபு என்பது உறுப்புத்திரிதல், முழுவதும் திரிதல் என இரண்டு வகைப்படும்.

முதல் எழுத்து மாறாமல் நிற்க, எஞ்சிய உறுப்பு எழுத்துகள் வேறுபட்டு வருவது உறுப்புத்திரிதலாகும்.

கிளி → கிள்ளை; மயில் → மஞ்ஞை

ஒரு சொல் முற்றுமாகத்திரிந்து வழங்குவது முழுவதும் திரிதல் ஆகும்.

வெற்பு → விண்டு, விலங்கல்

இயற்சொற்களின் திரிபுகளாகிய திரிசொற்கள் இன்பம் பயக்க வல்லவையாயின் அவற்றைச் செய்யுளில் பயன்படுத்தல் ஏற்புடைத்து என்பார்.

*செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்*
*தம் குறிப்பினவே திசைச்சொற்கிளவி (400)*

(செந்தமிழ் வழங்கும் தமிழ்நாட்டைச் சார்ந்த பன்னிரண்டு நாடுகளில் வாழும் மக்களுக்கு மட்டுமே பொருள் விளங்குமாறு வழங்கும் சொற்கள் திசைச்சொற்களாகும்.)

ஆ, எருமை என்பவற்றைத் தென்பாண்டி நாட்டார் பெற்றம் என்னும் சொல்லால் குறிப்பர். இது திசைச்சொல்லாகும்.

செந்தமிழ்சேர்ந்த பன்னிரு நிலங்கள்: பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்கா நாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு.

*வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே. (401)*

(வடமொழிக்கு உரிய எழுத்துக்களை நீக்கித் திருத்தி அமைக்கப்பெற்ற வடசொல்லும் செய்யுளுக்கு உரியதாகும்.)

மேரு, குங்குமம் போன்றவை திருத்தி அமைக்கப்பெற்ற வடசொற்கள்.

வடமொழிப் பெயர்களிலுள்ள வடவெழுத்துக்களை நீக்கி, இலக்குவன், வசிட்டன், தயரதன் என்று கம்பர் கையாளுதல் காண்க.

***சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்.*** (402)

வடசொற்கள் முழுமையாக வராமல் சிதைந்துவரினும் அவற்றுள் பொருத்தமானவற்றைப் புலவர் ஏற்றுக்கொள்வர்.

**அரமிய** வியலகத்து இயம்பும் - அகநானூறு 424

அரமியம் → ரம்யம்

வடமொழி என்பது சமஸ்கிருதத்தை மட்டுமல்லாமல் அதற்கும் முந்தைய மொழியான பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளையும் குறிக்கும். எழுத்து வழக்கிலும், பேச்சுவழக்கிலும் சிறந்து வழங்கும் மொழியில் பிறமொழிச் சொற்கள் அரசியல், வணிகத் தொடர்புகளால் வந்து புகுதல் தவிர்க்க இயலாதாகையால் தமிழர் மனங்கொள்ள வேண்டிய நெறியைத் தொல்காப்பியர் சுட்டிக்காட்டுவார். வடசொற்களைக் கையாளும்போது தேவையின்றிப் பொருளாழமற்ற, வெற்று ஆரவார, வெடிப்பொலிச்சொற்களை நுழைத்தல் கூடாது என்பதற்காக இயைந்தன மட்டும் கொள்ளல் வேண்டும் என்பார்.

வரம்பின்றிப் புகுத்தப்பெற்ற வடமொழிச் சொற்களால் வழக்கு இழந்துபோன தமிழ்ச்சொற்களின் அருமையறிந்து அவற்றை மீட்டெடுக்க முயலாமல் மேலும் மேலும் வேற்றுமொழிச் சொற்களைக் கலத்தல் தமிழுக்கு ஊறு செய்யும் என்பது தமிழ்ப்படைப்பிலக்கியக்காரர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.

பல வடசொற்கள் தமிழில் புகுந்து தமிழ்க்கவிஞர்களால் தொடர்ந்து கையாளப்பட்டமையால் அவற்றின் பொருள்வளம் பெருகிற்று.

***அந்நாற் சொல்லும் தொடுக்கும் காலை***
***வலிக்கும் வழி வலித்தலும் மெலிக்கும் வழி மெலித்தலும்***
***விரிக்கு வழி விரித்தலும் தொகுக்கும் வழித்தொகுத்தலும்***
***நீட்டும் வழி நீட்டலும் குறுக்கும் வழிக்குறுக்கலும்***
***நாட்டம் வலிய என்மனார் புலவர்.*** (403)

மேற்சொன்ன நால்வகைச் சொற்களைக் கொண்டு, செய்யுள் இயற்றும்போது முருகியல் இன்பம் தருதற்குத் தேவையான இடங்களில் மெல்லெழுத்துக்களை அவற்றிற்கு இனமாகிய வல்லெழுத்துக்களாக மாற்றுதலும், வல்லெழுத்துக்களை அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துக்களாக மாற்றுதலும், சொல்லில் மறைந்துநிற்கும் எழுத்துக்களை விரித்தலும், விரிந்து நிற்கும் எழுத்துக்களைத் தொகுத்தலும், குறில் எழுத்துக்களை நெடிலாக்குதலும், நெடில் எழுத்துக்களைக் குறிலாக்குதலும் ஆகிய செயற்பாடுகள் சான்றோரால் நிலைநாட்டப் பெறும் என்று புலவர் கூறுவார்.

தமிழில் செய்யுள் செய்வார் பெற்றிருக்கும் உரிமைகளை உணர்க. செய்யுள் செய்தற்குத் தமிழ் யாப்பிலக்கணம் இடையூறாக இருக்கிறதென்று புலம்புவார் யாப்பிலக்கணம் அறியாதவராகவோ, எது செய்யுள் என்று புரியாதவராகவோ இருத்தல் வேண்டும்.

**மெல்லினம் வல்லினமாதல்:**

குறுக்கை இரும்புலி - ஐங்குறுநூறு 266

குறுங்கை → குறுக்கை.

**வல்லினம் மெல்லினமாதல்**

தண்டையின் இனக்கிளி கடிவோர்

தட்டை → தண்டை

**விரித்தல்:**

தண்ணந்துறைவன் - குறுந்தொகை 296

தண் → தண்ணம்

**தொகுத்தல் :**

மழவர் ஓட்டிய - அகநானூறு 1

மழவரை ஓட்டிய → மழவர் ஓட்டிய

**குறில் நெடிலாதல் :**

வீடுமின்

விடுமின் → வீடுமின்

**நெடில் குறிலாதல்:**

அழுந்துபடு விழுப்புண் - நற்றிணை 97

ஆழ்ந்துபடு → அழுந்துபடு

இம்மாறுபாடுகள் சந்த இன்பத்திற்கு மட்டுமல்லாமல் சொற்சிக்கனம், எழுத்துச்சிக்கனம் ஆகியவற்றிற்கும் வழிசெய்தல் உணர்க.

*நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று*
*அவைநான்கு என்ப மொழிபுணர் இயல்பே* *(404)*

(சொற்கள் தம்முள் புணர்ந்து நிற்கும் முறை நிரல்நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்று நான்கு வகைப்படும் என்பர்.)

இப்பொருள்கோள் வகைகள் சொற்களை அடுக்குதற்குப் புலவர்கள் கையாளும் வழிகளை மிகுதிப்படுத்தும்.

**4**

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்திலேயே சில நூற்பாக்களில் எழுத்துக்கள் செய்யுளில் பெறக்கூடிய மாற்றங்களைச் சொல்கிறார்.

1. செய்யுள் இறுதிப் போலும் மொழிவயின்
னகார மகாரம் ஈரொற்று ஆகும். (51)

(செய்யுளில் சொல்லின் இறுதியில் 'போலும்' எனும் சொல் வந்தால் அது 'போன்ம்' என்று இரண்டு ஒற்றுக்களாய் ஆகும்.)

'சிதையும் கலத்தைப் பயினால் திருத்தித் திசை அறி மீகானும் போன்ம்' (பரி.10:55)

2. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது
நீட வருதல் செய்யுளுள் உரித்தே. (207-208)

(அகரச் சுட்டின்முன் உயிர்முதல்மொழியாக வந்தாலும் வகரம் மிக்கு முடியும் தன்மையில் மாற்றம் இல்லை. அகரச்சுட்டுக்கு நீண்டு வருதல் செய்யுளில் நிகழும்.)

அ + இடை → ஆயிடை

3. பலவற்று இறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர் மொழியான. (213)

(செய்யுளில் பொருள் தொடர்ச்சியை நிறைவு செய்யும் பொருட்டுப் பல என்னும் சொல்லின் இறுதி அகரம் நீண்டு முடியும்.)

பல > பலா; சில > சிலா

'பலா அம் சிலா அம் என்மனார் புலவர்.'

4. குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே. (234)

(அரா, புறா, சுறா போன்ற சொற்கள் செய்யுளில் இறுதிச் சினைகெட்டு உகரம் பெறுவது ஏற்புடைத்து.)

அரா → அரவு; புறா → புறவு; சுறா → சுறவு; நிலா → நிலவு

5. இன்றியென்னும் வினையெஞ்சு இறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
**தொன்றியல் மருங்கின்** செய்யுளுள் உரித்தே. (237)

('இன்றி' என்னும் வினையெஞ்சு இறுதி செய்யுள் வழக்கில் உகரம் பெறுதல் தொன்மையான மரபாகும்.)

உப்பின்றி + உண்க › உப்பின்று உண்க

'அன்றி' என்பதும் செய்யுளில் இம்முடிவு கொள்ளும்.

'நாளன்று போகி' (புறம்.124)

6. அன்று வருகாலை ஆ ஆகுதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கில் உரித்தென மொழிப. (258)

(மூன்று சுட்டுமுதல் இறுதிகளும் செய்யுளில் ஒன்று என்னும் சொல்லை எதிர்கொள்ளும் போது உகரம் ஆகாரம் ஆகும்.
ஐ என்னும் சாரியை இடையில் வந்து முடியும்போது அவ்வுகரத்தின் மீது ஊர்ந்த மெய்கெடும்.)

அது + அன்று > அதான்று

அது + ஐ + அன்று > அதையன்று

"அதா அன்றென்ப வெண்பா யாப்பே"

7. விண் என வருஉம் காயப் பெயர் வயின்
உண்மையும் உரித்தே அத்து என் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை (305)

(ஆகாயத்தைக் குறிக்கும் விண் என்னும் பெயர் செய்யுளில் வினைச்சொல் முன்வரும்போது அத்துச்சாரியை பெறும்.)

விண் + கொட்கும் › விண்ணத்துக் கொட்கும்

"விண்ணத்துக் கொட்கும் விரைசெல் ஊர்தியோய்."

8. இலம் என் கிளவிக்குப் படுவரு காலை

நிலையலும் உரித்தே செய்யுளான" (316)

(செய்யுளில் இலம் எனும் சொல்முன் படு எனும் சொல் வரும்போது மகர ஈறு கெடாது நிற்பதற்கு உரியதாகும்.)

இலம் + படு > இலம்படு

"இலம்படு புலவர் ஏற்றகை நிறைய" (மலைபடுகடாம் 576)

9. பொன் என் கிளவி ஈறுகெட முறையின்
முன்னர்த்தோன்றும் லகார மகாரம்
செய்யுள் மருங்கில் தொடர் இயலான. (356)

(செய்யுளில் பொன் என்னும் சொல்லின் னகரம் கெட லகார, மகாரம் சேர்ந்து, பொலம் என்று ஆகி இயல்பாக வரும்.)

பொன் + பூ > பொலம்பூ

"பொலம்படப் பொலிந்த கொய்சுவற் புரவி"

"பொலந்தேர்க்குட்டுவன்"

இம்மாற்றங்களெல்லாம் தொன்மையான மரபின என்று தொல்காப்பியரே சுட்டுவதால் தமிழ்ச் செய்யுள் எவ்வளவு பழமையானது என்பது புலப்படும்.

**5**

சொற்களைக் கையாளும் புலவனுக்குரிய உரிமைகளைச் சொல்லதிகார நூற்பாக்கள் சிலவும் தெரிவிக்கும்.

1. இனச்சுட்டு இல்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறு அல்ல செய்யுள் ஆறே. (18)

(இனமில்லாத பொருள்களின் முன்னர்ப் பண்பை விளக்கும் அடையாகிய சொல்லை இணைத்துக் கூறுதல் உலக வழக்கு அன்று; செய்யுள் வழக்காகும். ஒரு தன்மை கொண்ட ஒரு பொருள் இனமில்லாப் பொருளாகும்; மற்றவை இனமுள்ள பொருள்களாகும்.)

செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்திங்களுள் வெயில் வேண்டினும் (புறம்.38)

ஞாயிறும் திங்களும் இனமில்லாத பொருள்கள்; அவற்றிற்குச் செஞ்ஞாயிறு, வெண்திங்கள் என்று அடைகொடுத்துக் கூறுவது செய்யுள் வழக்கு.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# சங்கச் செய்திகள்

05.07.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் கு.அழகிரிசாமி அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளங்கலை இரண்டாமாண்டு மாணவர் மா.அழகுவேல் தமது உரையில் "கு.அழகிரிசாமி அவர்கள் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் இளமைக்கால நண்பர். வல்லிக்கண்ணன், தொ.மு.சி.ரகுநாதன், புதுமைப்பித்தன் ஆகியோர் இவரது சமகால எழுத்தாளர்கள். பாரதி மற்றும் புதுமைப்பித்தனுக்கு அடுத்த தலைமுறை எழுத்தாளர்களில் முக்கியமானவராகக் கருதப்படுபவர். தம்முடைய எழுத்தின் மூலமும் இடைவிடாத தேடலின் மூலமும் தேசிய உணர்வுகளும், புதிய சமூக மறுமலர்ச்சிக்கான கருத்துகளும், புதிய இலக்கிய உணர்வுகளும் பெருகிக் கொண்டிருந்த காலகட்டத்தில் வாழ்ந்த அவர், கரிசல் காட்டு வாழ்க்கைச் சூழலின் பல்வேறு உணர்வுகளை சிறப்பாகப் படம்பிடித்துக் காட்டியவர். நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், நாடகங்கள், மொழிபெயர்ப்புகள், பத்திரிகை, பதிப்பு, கடிதங்கள், பேச்சு என முழு இலக்கியவாதியாக வாழ்ந்தவர். உலகப் புகழ்பெற்ற மக்சிம் கார்க்கியின் நூலை முதன்முதலில் மொழிபெயர்த்தவர் இவரே. சில பிறமொழிக் கவிதைகளையும் ஆங்கிலத்தின் வழியாக அவர் மொழிபெயர்த்திருக்கிறார். இவரது 'ராஜா வந்திருக்கிறார்' என்ற கதை பல இந்திய மொழிகளிலும் ரஷ்ய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. 1970ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி அவருக்குப் பரிசு வழங்கிக் கௌரவித்தது" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கு.அழகிரிசாமி அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

05.07.2018 அன்று குருதிக் கொடை விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'உதிரம் 18 மாரத்தான்' ஓட்டம் மதுரை தமுக்கம் மைதானத்தில் தொடங்கி மதுரை மருத்துவக் கல்லூரியில் முடிவடைந்தது. இந்நிகழ்ச்சியில் செந்தமிழ்க் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பாக 21 மாணவர்கள் மாரத்தான் ஓட்டத்தில் கலந்து கொண்டனர்.

06.07.2018 அன்று முற்பகல் 10.00 மணியளவில் மயிலை சிவமுத்து அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளநிலை ஆய்வாளர் செ.திவ்யா தமது உரையில் "மயிலை சிவமுத்து அவர்கள் குழந்தை இலக்கியத்தில் வெற்றி பெற்ற மிகச் சிலருள் ஒருவர். நித்தில வாசகம் என்னும் தமிழ்ப் பாட புத்தகவரிசை அவர் எழுதிய நூல்களுள் தலைசிறந்து விளங்கியதாகும். திருக்குறளுக்கு இனிய, எளிய உரையையும் எழுதியுள்ளார். சிவமுத்து அவர்கள் மாணவர்கள் தாய்மொழியாகிய தமிழில் பெரும்பற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். 1938ஆம் ஆண்டு இந்தி மொழிப் படிப்பு வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டபோது கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்தவர். தமிழுக்கு அவர் ஆற்றிய தலையாய பணிகளைப் பாராட்டும் விதத்தில் 1960ஆம் ஆண்டு சென்னையில் தமிழறிஞர்கள் ஒன்றுகூடி 'தமிழ்நெறிக் காவலர்' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டுப் பெற்ற சிறப்புக்குரியவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மயிலை சிவமுத்து அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

09.07.2018 அன்று முற்பகல் 10.30மணியளவில் செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு மற்றும் ஆற்றுப்படுத்துதல் விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரிச் செயலாளர் இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் தலைமை தாங்கினார். மதுரை அகில இந்திய வானொலியின் மூத்த அறிவிப்பாளர் திரு. ச.ஞானசம்பந்தன் அவர்கள் முதலாமாண்டு வகுப்புக்களைத் துவக்கிவைத்து மாணவர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக எழுச்சியுரை ஆற்றினார்.

11.07.2018 அன்று முற்பகல் 10 மணியளவில் மதுரை மாநகரக் காவலும் செந்தமிழ்க் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டமும் இணைந்து செந்தமிழ்க் கல்லூரியில் 20 மாணவர்கள் அடங்கிய "போதை தடுப்பு மையம்" தொடங்கியது. இவ்விழாவிற்கு கல்லூரிச் செயலாளர் இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் தலைமை தாங்கினார். காவல் ஆய்வாளர் திரு. துரைப்பாண்டியன் அவர்கள் தனது சிறப்புரையில் போதையினால் பாதை தடுமாறும் இளைஞர்கள் குறித்த செய்திகளையும்

போதையற்ற சமுதாயத்தை உருவாக்க மாணவர்கள் செய்ய வேண்டிய செயல்கள் மற்றும் அவர்களின் கடமைகள் குறித்தும் விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். போதைத் தடுப்பு அமைப்பிற்கு தலைவராக மூன்றாமாண்டு இளம் இலக்கியம் மாணவர் மு.வினோத்குமார், செயலராக இரண்டாமாண்டு இளங்கலை மாணவர் கு.காமாட்சி மற்றும் பொருளாளராக இரண்டாமாண்டு இளங்கலை மாணவி ச.யோகலெட்சுமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

11.07.2018 அன்று முற்பகல் 10.30 மணியளவில் இரா.இராகவையங்கார் அவர்களின் நினைவேந்தல் நடைபெற்றது. இளங்கலை மூன்றாமாண்டு மாணவி வினிதா அவர்கள் தமது உரையில் "தமிழ்ப் பேரறிஞர் இரா.இராகவையங்கார் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தினின்று 1902ஆம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கும் 'செந்தமிழ்' இதழின் முதல் ஆசிரியர். பாண்டித்துரைத் தேவர், முத்துராமலிங்க ராஜராஜேஸ்வர சேதுபதி, சண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி ஆகிய மூன்று தலைமுறையினர்களது அவையில் அரசவைப் புலவராகத் திகழ்ந்த பெருமைக்குரியவர். நூல்களைப் பதிப்பித்தல், அரிய நூல்களுக்கு ஆராய்ச்சி உரை எழுதுதல், பிற மொழிகளிலிருந்து குறிப்பாக வடமொழிக் காவியங்களை மொழிபெயர்த்தல், படைப்பிலக்கியம் போன்ற அனைத்துத் துறைகளிலும் பெரும்புகழ் பெற்று விளங்கியவர். சேது சமஸ்தானம், சேதுபதி பள்ளி, சேசையர் பள்ளி, மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் எனப் பல்வேறு இடங்களில் பணியாற்றிக் கொண்டே அருந்தமிழ் வளர்க்கும் பணியைச் செவ்வனே செய்தவர். தமிழ்ப் புலவர், வடமொழிப் புலவர், இசைக் கலைஞர்கள், சுவாமி விவேகானந்தர் போன்ற அறிஞர்கள் பலருடன் கலந்துரையாடியவர். மகாவித்துவான், பாஷாகவிசேகரர் முதலிய பட்டங்களைப் பெற்ற பெருமைக்குரியவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக இரா.இராகவையங்கார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

19.07.2018 அன்று முற்பகல் 10.00 மணியளவில் செந்தமிழ்க் கல்லூரியின் மேனாள் செயலாளர், வழக்கறிஞர் மா.சங்கரபாண்டியனார் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. "வழக்கறிஞர்

மா.சங்கரபாண்டியனார் அறக்கட்டளை” சொற்பொழிவினை மனிதத் தேனீ ரா.சொக்கலிங்கம் அவர்கள் “வாழ்வே தமிழ்” என்ற தலைப்பில் நிகழ்த்தினார். அவர் தனது சிறப்புறையில் மிகச்சிறந்த பொருளீட்டும் வாய்ப்புடைய வழக்குரைஞர் தொழிலில் இருந்தாலும் நாற்பதாண்டு காலம் தமிழ்ப்பணி, கல்விப்பணியாற்றியவர் மா.சங்கரபாண்டியனார். தாய்மொழிக்கெல்லாம் தாய்மொழி தமிழ். எந்த மொழி பேசினாலும் சொந்தமொழி போல் பேசும் ஆற்றல் உடைய ஒரு இனம் உண்டு என்றால் அது தமிழ் இனம் மட்டும்தான். தமிழின் சிறப்பு கலை, சமநிலை, அறம், மனிதநேயம் போன்றவற்றை எடுத்துக்கூறினார். பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், கண்ணதாசன், பெரியார், காமராசர், கக்கன், ஜீவா, அண்ணா போன்ற ஆளுமைகள் குறித்த சிறந்த செய்திகளையும் பகிர்ந்துகொண்டார். முன்னதாகக் கல்லூரியின் முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் கல்லூரிக்குழுத் தலைவர் வழக்குரைஞர் ச.தசரதராமன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

19.07.2018 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் சுவாமி விபுலாநந்தர் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை இரண்டாமாண்டு மாணவி பா.ஸ்ரீதேவி தமது உரையில் “மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் பங்கேற்று பண்டிதர் பட்டம் பெற்றவர். இலங்கையிலிருந்து வந்து இப்பட்டத்தை முதன்முதலில் பெற்றவர் சுவாமி விபுலாநந்தரே. தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்' இதழில் பல்வேறு தலைப்புகளில் இலக்கியக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இசைத்தமிழ் ஆய்வு செய்து 'யாழ் நூல்' எனும் சிறந்த நூலைப் படைத்தவர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக 'யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்கம்' என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்த்தவர். மகாகவி பாரதியின் பாடல்களை முதன்முதலில் இலங்கையில் பரவிடச் செய்த பெருமை தமிழறிஞர் சுவாமி விபுலாநந்தரையே சாரும்” என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக சுவாமி விபுலாநந்தர்

அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

25.07.2018 அன்று பெண்களின் நலம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. 'யாக்ட் ட்ரஸ்ட்' நிறுவனர் செல்வி அமிர்தம் அவர்கள் கருத்துரை வழங்கினார். பெண்கள் உடல்நலம் பேண வேண்டியதன் அவசியத்தை மாணவியரிடையே எடுத்துக் கூறினார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்களான முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் செய்தனர்.


31.07.2018 அன்று முற்பகல் 10.30 மணியளவில் மு.கோவிந்தசாமி அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளங்கலை இரண்டாமாண்டு மாணவர் பிரசாந்த் தமது உரையில் "திருக்குறட் செம்மல் டாக்டர் மு.கோவிந்தசாமி அவர்கள் அன்னைத் தமிழின் மேன்மைக்கு உழைத்த தமிழ்ப் பேரறிஞர்களில் ஒருவர். தமது சொற்பொழிவால் மக்களிடையே தமிழுணர்வை ஊட்டியவர். அரிய நூல்கள் பலவற்றை இயற்றி தமிழ்த் தொண்டு ஆற்றியவர். திருக்குறள் கருத்துக்களை முறையாக மக்களிடம் பரப்பும் உயர்ந்த பணியைச் செய்தவர். திருக்குறள் குறித்த 13 நூல்களை எழுதியுள்ளார். இவர் இயற்றிய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூல் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளது. இவருடைய அரிய திருக்குறள் பணியைப் பாராட்டித் தமிழக அரசு 'திருவள்ளுவர் விருது' வழங்கிப் போற்றியுள்ளது" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மு.கோவிந்தசாமி அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

> **மெய்த் தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்**
> **கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்குஞ்**
> **சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்**
> **அத்தனை நாடி அமைந்தொழிந் தேனே.**
>
> **- திருமந்திரம்**

# செப்டம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



தனிநாயக அடிகளார்
(செப்.1)




சி.இலக்குவனார்
(செப்.3)




பாரதியார்
(செப்.11)




மறைமலையடிகள்
(செப்.15)



திரு.வி.க.
(செப்.17)



கவிமணி தேசிக
விநாயகம்பிள்ளை
(செப்.26)



இராய.
சொக்கலிங்கனார்
(செப்.30)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

## ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
,Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

# செந்தமிழ்க் கல்லூரி

## நான்காம் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் சு.விஜயன்**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
**THE SECRETARY**
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு,
மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1